කාර්යසාධන වාර්තාව
செயற்திறன் அறிக்கை
Performance Report
2021



අග්‍රාමාත්‍ය කාර්යාලය
பிரதம அமைச்சர் அலுவலகம்
Prime Minister's Office



செயற்திறன் அறிக்கை

2021

பிரதம அமைச்சர் அலுவலகம்

மின்னஞ்சல் முகவரி : கைழஞிஅழகஉை_ந.பழஎ.டம
இணையத்தளம் : றறறி.அழகஉை_ந.பழஎ.டம
தொலைபேசி : 011-2575317
பெக்ஸ் : 011-2574143
முகவர : 58, சேர் ஏர்னஸ்ட் த சில்வா மாவத்தை
கொழும்பு 07

உள்ளடக்கம்

தலைப்பு **பக்க இலக்கம்**

1. நிறுவனம் தொடர்பான விபரம் **1**

1.1. அறிமுகம் 3

1.2. நிறுவனத்தின் தூரநோக்கு மற்றும் செயற்பணி 4

1.2.1. பிரதம அமைச்சர் அலுவலகத்தின் பிரதான பொறுப்புக்கள் 5

1.3. கடமைகள் மற்றும் பணிகள 6

1.4. பிரதம அமைச்சர் அலுவலகத்தின நிறுவனக் கட்டமைப்பு 8

2. முன்னேற்றம் மற்றும் எதிர்கால நோக்கு **9**

2.1. அபிவிருத்திப் பிரிவு 11

2.1.1 அபிவிருத்தி அலுவல்கள் 11

2.1.2 திட்டமிடல் அலுவல்கள 30

2.2. தாபன மற்றும் விசேட அலுவல்கள் 33

2.2.1 விசேட அலுவல்கள் பிரிவு 34

2.2.2 நிகழ்ச்சித்திட்ட முகாமைத்துவ அலகு 35

2.2.3 பாராளுமன்ற மற்றும் அமைச்சரவை அலுவல்கள் அலகு 37

2.3. சட்ட அலுவல்கள் பிரிவு 43

2.3.1 சட்ட அலுவல்கள் பிரிவின் கடமைப்பொறுப்பு 43

2.4. பொதுசனத் தொடர்புகள் பிரிவு 47

2.4.1 பொதுசனத் தொடர்புகள் அலகு 47

2.4.2 சமய அலுவல்கள் பிரிவு 50

2.5.நிர்வாகப் பிரிவு 64

2.5.1 நிர்வாக உப பிரிவு ஐ 64

2.5.2 நிர்வாக உப பிரிவு ஐஐ 68

உள்ளடக்கம்

தலைப்பு **பக்க இலக்கம்**

2.6. ஊடக மற்றும் தொடர்பாடல் பிரிவு 70

2.6.1. ஊடக மற்றும் தொடர்பாடல் பிரிவின் கடமைப்பொறுப்பு 70

2.7. உள்ளக கணக்காய்வுப் பிரிவு 73

2.7.1 உள்ளக கணக்காய்வுப் பிரிவின் கடமைப்பொறுப்பு 73

2.8. சர்வதேச அலுவல்கள் தொடர்பான பிரிவு 76

2.8.1 சர்வதேச அலுவல்கள் தொடர்பான பிரிவின் கடமைப்பொறுப்பு 76

3. ஆண்டின் ஒட்டுமொத்த நிதிச் செயற்திறன் 83

3.1. நிதிச் செயலாற்றுகைக் கூற்று 85

3.2. நிதி நிலைமை கூற்று 86

3.3. காசுப் பாய்ச்சல் கூற்று 87

4. நிறுவனத்தின் செயற்திறன் குறிகாட்டிகள் 89

4.1. நிறுவனத்தின் செயற்திறன் குறிகாட்டிகள் (செயல் திட்டத்திற்கு ஏற்ப) 91

5. நிலைபேறான அபிவிருத்தி இலக்குகளை அடைந்துகொள்வதன் செயற்திறன் 99

5.1. நிலைபேறான அபிவிருத்தி இலக்குகளை அடைந்துகொள்வதன் செயற்திறன் குறிகாட்டிகள் 101

5.2. நிலைபேறான அபிவிருத்தி நோக்கங்களை அடைந்துகொள்வதன் இலக்குகள் மற்றும் குறிகாட்டிகள் 113

6. மனித வளங்கள் தொடர்பான குறிப்பு 127

6.1. பதவியணி எண்ணிக்கை முகாமைத்துவம் 129

6.2. மேலதிக பணியாட்தொகுதி அல்லது பணியாட்தொகுதிப் பற்றாக்குறை நிறுவனத்தின் செயற்திறனில் தாக்கம் செலுத்தும் விதம் 129

உள்ளடக்கம்

தலைப்பு **பக்க இலக்கம்**

6.3. மனித வளங்கள் அபிவிருத்தி 129

7. இணக்கப்பாட்டு அறிக்கை 133

7.1. இணக்கப்பாட்டு அறிக்கை 135

8. கணக்காய்வாளர் நாயகத்தின் அவதானங்கள 149

8.1. கணக்காய்வாளர் நாயகத்தின் அவதானங்கள 151

01. நிறுவனம் தொடர்பான விபரம்

1.1 அறிமுகம்

இலங்கை காலனித்துவத்தின் கீழ் காணப்பட்ட 1947 ஆம் ஆண்டு பிரதம அமைச்சர் பதவி தாபிக்கப்பட்டதுடன், பிரித்தானியாவிடமிருந்து சுதந்திரம் பெற்ற பின்பு 1972 ஆம் ஆண்டு வரை இப்பதவி "சிலோன் பிரதம அமைச்சர்" (சைஅந ஆளைளவநச ழக ஊநலடழை) எனும் பெயரில் அழைக்கப்பட்டது. அது வரை இலங்கையின் பிரதம அமைச்சருக்கு ஐக்கிய இராச்சியத்தின் பிரதமருக்குச் சொந்தமான அதிகாரங்களை ஒத்த அதிகாரங்கள காணப்பட்டன. 1972 ஆம் ஆண்டு நிறைவேற்றப்பட்ட முதலாவது குடியரசு யாப்புக்கு ஏற்ப இலங்கை சுயாதீன மற்றும் இறைமையுள்ள குடியரசாக மாற்றம் பெற்ற பின்பு "இலங்கையின் பிரதம அமைச்சர்" (சைஅந ஆளைளவநச ழக ளுசை டுயமெய) என மாற்றமடைந்தது. இந்தக் காலப்பகுதியில் வெளிநாட்டு அலுவல்கள் மற்றும் அரச பாதுகாப்பு தொடர்பான அமைச்சுப் பதவியின் பொறுப்புக்களும் கௌரவ பிரதம அமைச்சருக்கு ஒப்படைக்கப்பட்டிருந்தது. 1978 ஆம் ஆண்டு நிறைவேற்றப்பட்ட இரண்டாவது குடியரசு அரசியலமைப்பு ஊடாக நிறைவேற்று அதிகார ஜனாதிபதிப் பதவி அறிமுகப்படுப்படுத்தப்பட்டது முதல் இலங்கை பிரதம அமைச்சர் பதவியின் அதிகாரங்கள் திருத்தப்பட்டதுடன், அரசியலமைப்பின் பிரகாரம் அதிமேதகு ஜனாதிபதி அவர்கள் தனது அபிப்பிராயத்திற்கு ஏற்ப பாராளுமன்றத்தின் அதிகபட்ச நம்பிக்கை உள்ளவராக கருதப்படுகின்ற பாராளுமன்ற உறுப்பினருக்கு பிரதம அமைச்சர் பதவியை வழங்க நடவடிக்கை மேற்கொள்வார். மேலும், கௌரவ பிரதம அமைச்சர் அவர்கள் பிரதம அமைச்சர் பதவிக்கு மேலதிகமாக ஏனைய விடயங்களுக்கு ஏற்புடைய அமைச்சுக்களின் அமைச்சுப் பதவிகளும் வகிக்கப்படுகின்றன.

1947 ஆம் ஆண்டு முதலாவது பிரதம அமைச்சராக நியமனம் பெற்ற சேர் டீ.எஸ். சேனாநாயக்க அவர்கள் முதல் தற்போதைய பிரதம அமைச்சர் கௌரவ மஹிந்த ராஜபக்ஷ அவர்கள் வரை பதின்மூன்று (13) பிரதம அமைச்சர்கள் பிரதம அமைச்சர் பதவியை வகித்துள்ளனர். அதில் உலக அரசியலில் எவருக்கும் வீழ்த்த முடியாத சாதனையொன்றை நிகழ்த்தி கௌரவ திருமதி சிறிமாவோ பண்டாரநாயக்க அவர்கள் உலகின் முதலாவது பிரதம அமைச்சராக நியமனம் பெற்றமை இந்நாட்டு அரசியலில் பொன்னான சந்தர்ப்பமாகும். அவர் மூன்று தடவைகள் இலங்கையின் பிரதம அமைச்சர் பதவியை வகித்ததுடன், இரண்டாவது பதவிக் காலத்தில் இலங்கை குடியரசாக மாற்றம் பெற்ற விசேட நிகழ்வும் இடம்பெற்றது. மேலும், தற்போதைய பிரதம அமைச்சர் கௌரவ மஹிந்த ராஜபக்ஷ அவர்கள் நான்கு சந்தர்ப்பங்களில் இலங்கை ஜனநாயக சோஷலிசக் குடியரசின் பிரதம அமைச்சர் பதவியை வகித்தமை விசேட அம்சமாகும்.

1978 ஆம் ஆண்டு கொழும்பு 07, சேர் ஏர்னஸ்ட் த சில்வா மாவத்தையில் அமைந்துள்ள "சிறிமதீபாய" வளாகம் முதற் தடவையாக பிரதம அமைச்சர் அலுவலகமாகப் பயன்படுத்தப்பட்டது. அன்று முதல் தற்போது வரை "சிறிமீபாய" வளாகம் இந்நாட்டின் புகழ்பெற்ற பல பிரதம அமைச்சர்களினதும் அலுவலகமாகப் பயன்படுத்தப்பட்டுள்ளது.

இலங்கையின் பிரதம அமைச்சர் பதவிக்கு ஒப்படைக்கப்பட்டுள்ள பாரிய பொறுப்புக்களை நிறைவேற்றுவதில் பிரதம அமைச்சரின் செயலாளருக்கு தனிச்சிறப்பான கடமைப்பொறுப்பு ஒப்படைக்கப்படுகிறது. 1947 ஆம் ஆண்டு முதல் தற்போதைய பிரதம அமைச்சரின் செயலாளர் வரை 16 சிரேஷ்ட அதிகாரிகளினால் அந்த தனிச்சிறப்பான கடமைப்பொறுப்பு நிறைவேற்றப்பட்டுள்ளது.

1.2 நிறுவனத்தின் தூரநோக்கு மற்றும் செயற்பணி

தூரநோக்கு

- ‘‘சுயாதீன, இறைமையுள்ள மற்றும் சௌபாக்கியமிக்கதோர் இலங்கை’’

செயற்பணி

- “இலங்கை மக்களின் எதிர்பார்ப்புக்களை நிறைவேற்றும் பொருட்டும், அவர்களின் வாழ்க்கைத் தரத்தினை மேம்படுத்தும் பொருட்டும் அரச மற்றும் அரச சார்பற்ற நிறுவனங்களிடையே சிறப்பான ஒருங்கிணைப்பினைப் பேணி நல்லாட்சிமிக்க சிறந்ததோர் அரச பொறிமுறையொன்றுக்கான தலைமைத்துவத்தை வழங்குதல்’’

1.2.1 பிரதம அமைச்சர் அலுவலகத்தின் பிரதான பொறுப்புக்கள்

பிரதம அமைச்சர் அலுவலகம் இலங்கை சனநாயக சோ'லிசக் குடியரசின் பிரதம அமைச்சர் அவர்களின் உத்தியோகபூர்வ கடமை அலுவல்களை செயற்படுத்துகின்ற நிறுவனமாகும். அதற்கேற்ப பிரதம அமைச்சர் மஹிந்த ராஜபக்ஷ அவர்களின் வழிகாட்டலின் கீழ் "நாட்டைக் கட்டியெழுப்பும் சுபீட்சத்தின் நோக்கு" அரச கொள்கைச் சட்டகத்தில் உள்ளடங்கியுள்ள பத்து அம்சக் கொள்கைகளின் அடிப்படையில்

- பயனுள்ள பிரஜை
- மகிழ்ச்சியாக வாழும் குடும்பம்
- ஒழுக்க விழுமியங்களைக் கொண்ட சமூகம் மற்றும்
- செழிப்பான தேசம்


எனும் நான்கு நோக்கங்களை அடைந்துகொள்வதற்குத் தேவையான வழிகாட்டல், ஒருங்கிணைப்பு வசதிகளை வழங்குதல் மற்றும் தேவையான தலைமைத்துவத்தை வழங்குவது பிரதம அமைச்சர் அலுவலகத்தினால் மேற்கொள்ளப்படுகின்றது. மேலும் அரசாங்கத்தின் அபிவிருத்திக் கடமைப்பொறுப்பினை அடைந்துகொள்வதற்குத் தேவையான கொள்கைகளை வகுப்பதற்குப் பங்களிப்புச் செய்தல், சிறந்த அரச ஒருங்கிணைப்பு மற்றும் மக்களை மையப்படுத்திய அனுகுமுறையொன்று ஊடாக நிலைபேறான முறையில் நாட்டின் அபிவிருத்தி இலக்குகளை அடைந்துகொள்வதற்குப் பங்களிப்புச் செய்தல் என்பன பிரதம அமைச்சர் அலுவலகத்தினால் மேற்கொள்ளப்படுகின்றன.

1.3. கடமைகள் மற்றும் பணிகள்

- அரசாங்கத்தின் கொள்கைகள் மற்றும் தீர்மானங்களை செயற்படுத்துவதற்குத் தேவையான வழிகாட்டல்களை வழங்குதல்.
- பிரதம அமைச்சர் தலைமை தாங்கும் பல்வேறு குழுக்கள் மற்றும் கூட்டங்களுக்குத் தேவையான வசதிகளை வழங்குதல், ஒருங்கிணைத்தல் மற்றும் அவற்றின் முன்னேற்றம் பற்றிய பின்தொடர் நடவடிக்கைகளை மேற்கொள்ளல்.
- பிரதம அமைச்சரிடம் பாராளுமன்றத்தில் வினவப்படும் வினாக்களுக்குப் பதில்களை தயாரித்தல்.
- பிரதம அமைச்சரினால் பாராளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்படும் சட்ட மூலங்களுக்கு ஏற்புடைய அலுவல்களை ஒருங்கிணைத்தல்.
- சுபீட்சத்தின் நோக்கு கொள்கைகளை அடைந்துகொள்வதற்காக பல்வேறுபட்ட அரச நிறுவனங்கள் ஊடாக செயற்படுத்தப்படுகின்ற அபிவிருத்தி நிகழ்ச்சித்திட்டங்கள் மற்றும் கருத்திட்டங்கள் தொடர்பான ஒருங்கிணைப்பு, வழிகாட்டல், கண்காணிப்பு மற்றும் தொடராய்வு.
- பிரதம அமைச்சர் அவர்களுக்கு இராஜதந்திரத் தொடர்புகளைப் பேணிச் செல்வதற்கும் அவற்றை விருத்தி செய்வதற்கும் தேவையான வசதிகளை ஏற்படுத்தி கொடுத்தல்.
- பிரதம அமைச்சரின் வெளிநாட்டு விஜயங்களுடன் தொடர்பான ஒருங்கிணைப்பு மற்றும் வழிநடாத்தல்.
- பிரதம அமைச்சர் கலந்துகொள்ளும் அரச மற்றும் தேசிய வைபவங்கள் மற்றும் விசேட நிகழ்வுகளின்போது ஊடக வசதிகளை ஏற்படுத்திக் கொடுத்தல்.
- தேசிய மற்றும் சமய வைபவங்கள் மற்றும் சமூக உபசரணை சேவைகளை அரச அனுசரணையுடன் ஏற்பாடு செய்தல்.
- பிரதம அமைச்சரிடம் முன்வைக்கப்படும் பொது மக்களின் முறைப்பாடுகள் மற்றும் மனக்குறைகளை உரிய நிறுவனங்களிடம் முன்வைத்து நிவாரணத்தை வழங்குவதற்குத் தேவையான நடவடிக்கைகளை மேற்கொள்ளல்.

- பிரதம அமைச்சர் அலுவலகம், அலரி மாளிகை, பிரதம அமைச்சரின் உத்தியோகபூர்வ இல்லம் என்பவற்றை உரிய முறையில் பராமரித்துப் பேணி வரல்.
- பிரதம அமைச்சர் அலுவலகத்தின் அன்றாட நிர்வாக மற்றும் அபிவிருத்தி நடவடிக்கைகளை மேற்கொள்ளல்.

1.4 பிரதம அமைச்சர் அலுவலகத்தின் நிறுவனக் கட்டமைப்பு



02. முன்னேற்றம் மற்றும் எதிர்கால நோக்கு

2.1 அபிவிருத்திப் பிரிவு

2.1.1. அபிவிருத்தி அலுவல்கள்

"சுபீட்சத்தின் நோக்கு" பத்து அம்சக் கொள்கையினை மையப்படுத்தி, பிரதம அமைச்சரின் கட்டளைகளுக்கு உட்பட்ட வகையில் அவருக்கு ஒப்படைக்கப்பட்டுள்ள பணி மற்றும் செயற்பாடுகளை அடைந்துகொள்ள அபிவிருத்தி நிகழ்ச்சித்திட்டங்கள் மற்றும் கருத்திட்டங்களுக்குத் தேவையான கொள்கைகளை வகுப்பதன் ஊடாக பங்களிப்புச் செய்தல், மக்களை மையப்படுத்திய அணுகுமுறை மற்றும் சிறப்பான அரச ஒருங்கிணைப்பு மூலம் நிலைபேறான அபிவிருத்தி நோக்கங்களை அடைந்துகொள்வதற்கு ஒத்துழைப்பு வழங்குதல், அபிவிருத்திப் பணிகளைத் தொடராய்வு மற்றும் மதிப்பீட்டினைச் செய்யும் குறிக்கோளை முன்னிறுத்தி, பிரதம அமைச்சர் அலுவலகத்தின் "அபிவிருத்திப் பிரிவு" நிறுவப்பட்டுள்ளது.

❖ **அபிவிருத்திப் பிரிவின் கடமைப்பொறுப்பு**

- "சுபீட்சத்தின் நோக்கு" மற்றும் நிலைபேறான அபிவிருத்தி இலக்குகளை அடைந்துகொள்வதற்கான அரச பொறிமுறையொன்றைத் தயாரிப்பதற்குத் தேவையான பங்களிப்பை வழங்குதல்.
- தேசிய மற்றும் உப தேசிய அரச நிறுவனங்கள் ஊடாக மேற்கொள்ளப்படுகின்ற பாரியளவிலான அபிவிருத்தி நிகழ்ச்சித்திட்டங்கள் மற்றும் கருத்திட்ட வழிநடாத்தல் மற்றும் மதிப்பீடுகளைச் செய்தல்.
- சிறப்பாகத் தயாரிக்கப்பட்ட தரவு அமைப்பு மற்றும் ஒருங்கிணைப்புப் பொறிமுறையொன்றை உருவாக்குதல்.
- திட்டமிடலுக்கு அவசியமான இற்றைப்படுத்தப்பட்ட தகவல் அமைப்பொன்றை உருவாக்குதல் மற்றும் பேணிச் செல்லுதல்.
- பயனுறுதிவாய்ந்த, வழிநடாத்தல் கண்காணிப்பு மற்றும் மதிப்பீட்டுக் கட்டமைப்பொன்றை உருவாக்குதல்.

2021 ஆம் ஆண்டினுள் பிரதம அமைச்சர் அலுவலகத்தின் அபிவிருத்திப் பிரிவு ஊடாக நிறைவேற்றப்பட்ட பணிகள்.: நிகழ்ச்சித்திட்டங்கள்

❖ கிராமியப் பொருளாதாரத்தைக் கட்டியெழுப்புவதற்கான தேசிய நிகழ்ச்சித்திட்டம்

அரசாங்கத்தினால் செயற்படுத்தப்படுகின்ற தேசிய பொருளாதாரத்தைக் கட்டியெழுப்பும் வேலைத்திட்டத்துடன் இணைந்த வகையில் கிராமியப் பொருளாதாரத்தினையும் மேம்படுத்துவது முக்கியமானது என இனங்காணப்பட்டுள்ளது. இதற்காக செயற்படுத்தப்படுகின்ற அபிவிருத்திச் செயற்பாட்டினை வினைத்திறனுடன் கீழ் மட்டத்தை நோக்கிக் கொண்டுசெல்வதற்காகவும், பிரதேசரீதியாக இனங்காணப்பட்டுள்ள சிக்கல்கள் மற்றும் தேவைகளை வினைத்திறனுடன், துரிதமாக ஏற்புடைய தரப்பினரை நோக்கிச் செலுத்துவதற்கும் பொருத்தமான பொறிமுறையொன்று அவசியமாகும். மேலும், பிரதேச அபிவிருத்திப் பணிகளின்போது அமைச்சுக்களுக்கிடையிலான வினைத்திறன்மிக்க ஒருங்கிணைப்பு மற்றும் பல்வேறுபட்ட அமைச்சுக்களுக்கிடையே ஒன்றிணைந்த அபிவிருத்தி நிகழ்ச்சித்திட்டங்கள் தொடர்பாக கவனஞ் செலுத்துவதும் பயன்மிக்கதாகும். அதற்கேற்ப இந்தப் பணிகளை அடைந்துகொள்வதற்காக கிராமியப் பொருளாதாரத்தை மேம்படுத்தும் தேசிய நிகழ்ச்சித்திட்டம் அபிவிருத்திப் பிரிவின் தலைமையில் ஆரம்பிக்கப்பட்டதுடன், தற்போது இதற்கு ஏற்புடைய தொடராய்வு அலுவல்களும் மேற்கொள்ளப்படுகின்றன.

பிரதேசரீதியாக வழங்குகின்ற சேவைகள் மற்றும் அவற்றின் விடயப் பரப்புக்களின் தொடர்பினைக் கருத்திற்கொண்டு பின்வருமாறு இராஜாங்க அமைச்சுக்கள் மற்றும் தெரிவுசெய்யப்பட்ட கெபினட் அமைச்சுக்கள் 4 குழுக்களாக வகைப்படுத்தப்பட்டுள்ளன.

ஐ. சமூக உட்கட்டமைப்பு வசதிகள் அபிவிருத்திக் குழு

ஐஐ. வாழ்வாதார அபிவிருத்திக் குழு

ஐஐஐ. உள்நாட்டுக் கைத்தொழில்களை முன்னேற்றுவதற்கான அபிவிருத்திக் குழு

ஐஏ. கிராமிய உட்கட்டமைப்பு வசதிகள் அபிவிருத்திக் குழு

- **எதிர்பார்க்கப்படும் நோக்கங்கள்**

    - அமைச்சுக்கள் ஊடாக மக்களுக்கு வழங்கப்படும் சேவைகள் தொடர்பாக அறிவுறுத்தல்.
    - மேற்குறிப்பிட்ட அமைச்சுக்களின் விடயப் பரப்புக்களுக்கு ஏற்புடைய அந்தந்த மாவட்டங்களினுள் இனங்காணப்பட்ட சிக்கல்களுக்குத் துரிதமாக தீர்வுகளை வழங்குதல்.
    - அந்த அமைச்சுக்கள் அன்னியோன்யமாக ஒன்றுடனொன்று தொடர்புற்று பிரதேசரீதியான தனித்துவங்கள் மற்றும் சாத்திய வளங்களை இனங்காணுதல் மற்றும் அதற்குத் தேவையான துறைசார் திட்டங்களைத் தயாரித்தல்.
    - மாவட்ட மற்றும் பிரதேச மட்டத்தில் பொதுமக்கள் பிரதிநிதிகள், இராஜாங்க அமைச்சர்கள் மற்றும் அரச அதிகாரிகள் மத்தியில் சிறந்த அன்னியோன்ய தொடர்பினைக் கட்டியெழுப்புதல் ஊடாக இணைந்த அபிவிருத்திப் பொறிமுறையொன்றை உருவாக்கி அதனூடாக பிரதேச மற்றும் தேசிய அபிவிருத்தி இலக்குகளை அடைந்துகொள்ளுதல்.

அதன் ஆரம்ப கட்டமாக மேற்குறிப்பிட்ட சகல குழுக்களுக்கும் ஒரு மாவட்ட ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டம் வீதம் சகல மாவட்டங்களும் உள்ளடங்கும் வகையில் கூட்டங்களை நடாத்துவதற்கு நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டது.

அதற்கேற்ப, கூட்டத்தில் தகவல்களைப் பரிமாறிக்கொள்ளுதல் மற்றும் பொதுமக்கள் மனக்குறைகளுக்குத் தீர்வுகளைக் கண்டறியும் நோக்குடன் அரசியல்வாதிகள் மற்றும் அரச அதிகாரிகளை உள்ளடக்கிய மேடையொன்று மாவட்டத்தினுள் உருவாக்கப்பட்டதுடன், 2021 ஆம் ஆண்டில் 84 மொத்த கூட்ட அமர்வுகளில் 62 கூட்டங்கள் பௌதீகரீதியாக நடாத்தப்பட்டதுடன், எஞ்சிய மாவட்டங்களில் இந்த விடயத் துறைகளுக்கு ஏற்புடைய சிக்கல்கள் பொருளாதாரப் புத்தெழுச்சி மற்றும் வறுமை ஒழிப்புக்கான ஜனாதிபதி செயலணியின் உபகுழுக்கள் ஊடாக ஒன்லைனில் நடாத்தப்பட்ட கூட்டங்களில் பெற்றுக்கொள்ளப்பட்டன.

மாவட்டக் கூட்டங்களில் இனங்காணப்பட்ட சிக்கல்களைத் தீர்ப்பதற்கான நடவடிக்கைகளை மேற்கொள்ளுதல்

குழு	கூட்டத்தின்போது தீர்த்து முடிக்கப்பட்ட சிக்கல்கள் (%)	பின்னர் தீர்ப்பதற்காக பொறுப்பேற்கப்பட்ட சிக்கல்கள் (%)	கொள்கைரீதியான முடிவுகள் வழங்க வேண்டிய அல்லது அமைச்சுக்களுக்கிடையிலான மட்டத்தில் தீர்க்க வேண்டிய சிக்கல்கள் (%)
சமூக உட்கட்டமைப்பு வசதிகள் அபிவிருத்திக் குழு	11	83	06
வாழ்வாதார அபிவிருத்திக் குழு	09	86	05
உள்நாட்டு உற்பத்திக் கைத்தொழில்களை மேம்படுத்தும் அபிவிருத்திக் குழு	10	82	08
கிராமிய உட்கட்டமைப்பு வசதிகள் அபிவிருத்திக் குழு	16	**80**	**04**

சமூக உட்கட்டமைப்பு வசதிகள் அபிவிருத்திக் குழு மாவட்டங்களுக்கு ஏற்ப நடாத்தப்பட்ட கூட்டங்களில் முன்வைக்கப்பட்ட சிக்கல்கள் தொடர்பான சாராம்சம்

சூ	மாவட்டம்	கூட்டத்தின்போது தீர்த்து முடிக்கப்பட்ட சிக்கல்கள்		பின்னர் தீர்ப்பதற்காக பொறுப்பேற்கப்பட்ட சிக்கல்கள்		கொள்கைரீதியான முடிவுகள் வழங்க வேண்டிய அல்லது அமைச்சுக்களுக்கிடையிலான மட்டத்தில் தீர்க்க வேண்டிய சிக்கல்கள்		சமர்ப்பிக்கப்பட்ட மொத்த சிக்கல்களின் எண்ணிக்கை
		எண்ணிக்கை	(மூ)	எண்ணிக்கை	(மூ)	எண்ணிக்கை	(மூ)	
1	அனுராதபுரம்	7	9	67	88	2	3	76
2	கிளிநொச்சி / யாழ்ப்பாணம்	1	7	9	60	5	33	15
3	மன்னார்/ முல்லைத்தீவு/ வவுனியா	3	3	100	97	0	0	103
4	புத்தளம்	6	33	11	61	1	6	18
5	பதுளை	5	14	26	72	5	14	36
6	கண்டி	2	12	13	76	2	12	17
7	மாத்தளை	1	4	20	74	6	22	27
8	பொலன்னறுவை	10	20	37	76	2	4	49
9	இரத்தினபுரி	7	18	31	79	1	3	39
10	கேகாலை	9	12	63	85	2	3	74
11	களுத்துறை	3	8	30	81	4	11	37
12	மாத்தறை	4	12	28	88	0	0	32
13	குருநாகல்	6	24	18	72	1	4	25
14	கம்பஹா	0	0	33	92	3	8	36
15	காலி	2	4	44	86	5	10	51
16	கொழும்பு	13	57	9	39	1	4	23
17	திருகோணமலை	0	0	48	100	0	0	48
18	மட்டக்களப்பு	4	14	23	82	1	4	28
மொத்தம்		**83**	**11**	**610**	**83**	**41**	**6**	**734**

வாழ்வாதார அபிவிருத்திக் குழு
மாவட்டங்களுக்கு ஏற்ப நடாத்தப்பட்ட கூட்டங்களில் முன்வைக்கப்பட்ட சிக்கல்கள் தொடர்பான சாராம்சம்

சூ	மாவட்டம்	கூட்டத்தின்போது தீர்த்து முடிக்கப்பட்ட சிக்கல்கள்		பின்னர் தீர்ப்பதற்காக பொறுப்பேற்கப்பட்ட சிக்கல்கள்		கொள்கைரீதியான முடிவுகள் வழங்க வேண்டிய அல்லது அமைச்சுக்களுக்கிடையிலான மட்டத்தில் தீர்க்க வேண்டிய சிக்கல்கள்		சமர்ப்பிக்கப்பட்ட மொத்த சிக்கல்களின் எண்ணிக்கை
		எண்ணிக்கை	(மூ)	எண்ணிக்கை	(மூ)	எண்ணிக்கை	(மூ)	
1	மாத்தளை	1	5	17	85	2	10	20
2	பொலன்னறுவை	12	13	76	81	6	6	94
3	காலி	8	11	63	86	2	3	73
4	இரத்தினபுரி	3	8	31	79	5	13	39
5	மொனறாகலை	2	5	38	95	0	0	40
6	மாத்தறை	6	11	51	89	0	0	57
7	நுவரெலியா	5	9	52	88	2	3	59
8	கண்டி	4	7	39	71	12	22	55
9	களுத்துறை	1	4	15	65	7	31	23
10	கேகாலை	5	8	55	90	1	2	61
11	குருநாகல்	5	18	23	82	0	0	28
12	யாழ்ப்பாணம்/ கிளிநொச்சி	6	17	29	83	0	0	35
13	வவுனியா/ முல்லைத்தீவு/ மன்னார்	1	3	39	97	0	0	40
14	கம்பஹா	5	6	80	92	2	2	87
15	கொழும்பு	4	6	59	91	2	3	65
மொத்தம்		**68**	**9**	**667**	**86**	**41**	**5**	**776**

உள்நாட்டு உற்பத்திக் கைத்தொழில்களை மேம்படுத்தும் அபிவிருத்திக் குழு மாவட்டங்களுக்கு ஏற்ப நடாத்தப்பட்ட கூட்டங்களில் முன்வைக்கப்பட்ட சிக்கல்கள் தொடர்பான சாராம்சம்

சூ	மாவட்டம்	கூட்டத்தின்போது தீர்த்து முடிக்கப்பட்ட சிக்கல்கள்		பின்னர் தீர்ப்பதற்காக பொறுப்பேற்கப்பட்ட சிக்கல்கள்		கொள்கைரீதியான முடிவுகள் வழங்க வேண்டிய அல்லது அமைச்சுக்களுக்கிடையிலான மட்டத்தில் தீர்க்க வேண்டிய சிக்கல்கள்		சமர்ப்பிக்கப்பட்ட மொத்த சிக்கல்களின் எண்ணிக்கை
		எண்ணிக்கை	(மூ)	எண்ணிக்கை	(மூ)	எண்ணிக்கை	(மூ)	
1	அனுராதபுரம்	3	16	13	68	3	16	19
2	காலி	5	9	45	77	8	14	58
3	அம்பாந்தோட்டை	6	14	36	86	0	0	42
4	திருகோணமலை	3	20	6	40	6	40	15
5	குருநாகல்	3	15	14	70	3	15	20
6	மொனறாகலை	6	15	32	80	2	5	40
7	பொலன்னறுவை	4	14	20	72	4	14	28
8	புத்தளம்	1	7	13	88	1	7	15
9	கொழும்பு	1	7	14	93	0	0	15
10	கம்பஹா	6	9	59	88	2	3	67
11	இரத்தினபுரி	2	6	23	72	7	22	32
12	மாத்தறை	2	6	31	94	0	0	33
13	கண்டி	0	0	17	94	1	6	18
14	கேகாலை	2	3	65	93	3	4	70
15	யாழ்ப்பாணம்/ கிளிநொச்சி	1	8	11	84	1	8	13
16	வவுனியா/ முல்லைத்தீவு/ மன்னார்	5	21	19	79	0	0	24
மொத்தம்		50	10	418	82	41	8	509

கிராமிய உட்கட்டமைப்பு வசதிகள் அபிவிருத்திக் குழு மாவட்டங்களுக்கு ஏற்ப நடாத்தப்பட்ட கூட்டங்களில் முன்வைக்கப்பட்ட சிக்கல்கள் தொடர்பான சாராம்சம்

சூ	மாவட்டம்	கூட்டத்தின்போது தீர்த்து முடிக்கப்பட்ட சிக்கல்கள்		பின்னர் தீர்ப்பதற்காக பொறுப்பேற்கப்பட்ட சிக்கல்கள்		கொள்கைரீதியான முடிவுகள் வழங்க வேண்டிய அல்லது அமைச்சுக்களுக்கிடையிலான மட்டத்தில் தீர்க்க வேண்டிய சிக்கல்கள்		சமர்ப்பிக்கப்பட்ட மொத்த சிக்கல்களின் எண்ணிக்கை
		எண்ணிக்கை	மூ	எண்ணிக்கை	மூ	எண்ணிக்கை	மூ	
1	கிளிநொச்சி/ யாழ்ப்பாணம்	2	8	16	67	6	25	24
2	மன்னார்/ முல்லைத்தீவு/ வவுனியா	1	8	12	92	0	0	13
3	பொலன்னறுவை	3	8	33	89	1	3	37
4	மாத்தளை	1	5	16	84	2	11	19
5	காலி	16	23	51	73	3	4	70
6	கண்டி	13	50	13	50	0	0	26
7	நுவரெலியா	2	6	28	88	2	6	32
8	கேகாலை	2	3	70	94	2	3	74
9	குருநாகல்	0	0	35	100	0	0	35
10	மாத்தறை	10	26	27	71	1	3	38
11	அம்பாந்தோட்டை	8	8	96	92	0	0	104
12	அனுராதபுரம்	19	56	15	44	0	0	34
13	பதுளை	8	22	25	67	4	11	37
மொத்தம்		85	16	437	80	21	4	543

❖ பிரதேச நிர்வாகத்தின் சேவை வழங்கலை மேம்படுத்தல்

2172/9 ஆம் இலக்க, 2020.04.22 ஆந் திகதிய வர்த்தமானி அறிவித்தல் மூலம் தாபிக்கப்பட்டுள்ள பொருளாதாரப் புத்தெழுச்சி மற்றும் வறுமை ஒழிப்புக்கான ஜனாதிபதி செயலணியுடன் இணைந்து பிரதம அமைச்சர் அலுவலகத்தின் அபிவிருத்திப் பிரிவு ஊடாக பிரதேச நிர்வாகத்தின் சேவை வழங்கலை மேம்படுத்துவதற்கு மேற்கொள்ள வேண்டிய நடவடிக்கைகளைக் கண்டறிவதனையும், அவற்றை நடைமுறைரீதியாக செயற்படுத்துவதனையும் நோக்கமாகக் கொண்ட நிகழ்ச்சித்திட்டமொன்று ஆரம்பிக்கப்பட்டது. அதற்கேற்ப பல்வேறுபட்ட அமைச்சுக்கள், திணைக்களங்கள், உள்;ராட்சி நிறுவனங்களின் கீழ் சேவையாற்றுகின்ற கள உத்தியோகத்தர்களின் கடமைகளைப் பயனுறுதிவாய்ந்த முறையில் பயன்படுத்துவதற்குத் தேவையான முறையான வேலைத்திட்டமொன்றைத் தயாரிப்பதற்கு பல்வேறுபட்ட நிறுவனங்களைப் பிரதிநிதித்துவப்படுத்துகின்ற அதிகாரிகளை உள்ளடக்கிய 5 செயற்குழுக்கள் உருவாக்கப்பட்டன. அந்தக் குழுக்கள் ஊடாக பின்வரும் விடயங்கள் மற்றும் மேற்கொள்ள வேண்டிய ஆரம்ப நடவடிக்கைகள் இனங்காணப்பட்டன.

1. பிரதேச செயலகமொன்றில் அபிவிருத்தித் திட்டத்தினைத் தயாரிக்கும்போது பின்பற்ற வேண்டிய நடவடிக்கைகள் தொடர்பான வழிகாட்டல்கள் மற்றும் அபிவிருத்தித் திட்டத்தின் மாதிரியொன்றைத் தயாரித்தல்.
2. பிரதேச அபிவிருத்தித் திட்டத்தின் அடிப்படையில் பிரதேச செயலகங்களில் சேவையாற்றுகின்ற சகல கள உத்தியோகத்தர்களினதும் தொழில் விபரத்தினைத் தயாரிப்பதற்குப் பொதுவான படிவமொன்றை உருவாக்குதல்.
3. பிரதேச செயலகங்களில் சேவையாற்றுகின்ற கள உத்தியோகத்தர்களின் கடமைகளின் முன்னேற்றத்தினை அளவுரீதியாகவும், தரரீதியாகவும் அளவிடுவதற்கான மற்றும் தொடராய்வு செய்வதற்கான முறைமையொன்றை அறிமுகப்படுத்தல்.
4. பிரதேச செயலகங்களில் சேவையாற்றுகின்ற கள உத்தியோகத்தர்களின் கடமைகள் சம்பந்தமாக பொதுமக்களுக்கு அறிவுறுத்துவதற்கு மற்றும் அந்த கள உத்தியோகத்தர்களுக்கு ஏற்புடைய விடய அம்சங்கள் தொடர்பாக ஏனைய தரப்பினர் அறிந்துகொள்வதற்காக கையேடொன்றை உருவாக்குதல்.

5. பிரதேச செயலகங்களில் சேவையாற்றுகின்ற கள உத்தியோகத்தர்களின் சேவைப் பிரமாணக் குறிப்புக்கள் மற்றும் ஆட்சேர்ப்புத் திட்டங்களில் நிலவுகின்ற சிக்கல்களைத் தீர்த்தல் மற்றும் ஏற்புடைய உத்தியோகத்தர்களின் கொள்திறனை அபிவிருத்தி செய்தல்.

அதற்கேற்ப, பிரதேச நிர்வாகத்தின் சேவை வழங்கலை மேம்படுத்துவதற்காக மேற்குறிப்பிட்ட நடவடிக்கைகள் இனங்காணப்பட்டதுடன், அந்த தீர்வுகளைச் செயற்படுத்த வேண்டிய முறை தொடர்பாக கலந்துரையாடல்கள் மேற்கொள்ளப்பட்டன. 2021 ஆம் ஆண்டினுள் 03 கூட்டங்கள் நடாத்தப்படுள்ளன. எவ்வாறாயினும் அந்தக் காலப்பகுதியில் நாட்டில் நிலவிய கொவிட் தொற்று நிலைமை காரணமாக திட்டமிடப்பட்ட சகல கூட்டங்களையும் நடாத்த முடியவில்லை.

அதற்கேற்ப அவ்வாறு இனங்காணப்பட்ட விடயங்களைச் செயற்படுத்துவதற்கான 05 குழுக்கள் நிறுவப்பட்டன.

அதற்கேற்ப, பிரதேச நிர்வாகத்தின் சேவை வழங்கலை மேம்படுத்துவதற்காக இந்த செயல் குழுக்களின் ஒருங்கிணைப்பு அலுவல்கள் மற்றும் கூட்டங்களை ஏற்பாடு செய்தல், எதிர்கால நடவடிக்கைகளை வழிநடாத்தல் மேற்கொள்ளப்படுகின்றன.

பிரதேச சேவை வழங்கலை மேம்படுத்துவதற்கான குழுக்களினால் நிறைவேற்றப்பட்டுள்ள பணிகள்

#	குழு	நடாத்தப்பட்டுள்ள கூட்டங்களின் எண்ணிக்கை	முன்னேற்றம்
1	பிரதேச செயலகமொன்றில் அபிவிருத்தித் திட்டத்தினைத் தயாரிக்கும்போது பின்பற்ற வேண்டிய நடவடிக்கைகள் தொடர்பான வழிகாட்டல்கள் மற்றும் அபிவிருத்தித் திட்டத்தின் மாதிரியொன்றைத் தயாரித்தல்	1	பிரதேச அபிவிருத்தித் திட்டம் தயாரிக்கப்பட்டு நிறைவு செய்யப்பட்டுள்ளது.

#	குழு	நடாத்தப்பட்டுள்ள கூட்டங்களின் எண்ணிக்கை	முன்னேற்றம்
2	பிரதேச அபிவிருத்தித் திட்டத்தின் அடிப்படையில் பிரதேச செயலகங்களில் சேவையாற்றுகின்ற சகல கள உத்தியோகத்தர்களினதும் தொழில் விபரத்தினைத் தயாரிப்பதற்குப் பொதுவான படிவமொன்றை உருவாக்குதல்.	2	தற்போது கள உத்தியோகத்தர்களின் கடமைப் பட்டியல்களுக்கான பொதுவான படிவமொன்று வரைவு செய்யப்பட்டு நிறைவு செய்யப்பட்டுள்ளது.
3	பிரதேச செயலகங்களில் சேவையாற்றுகின்ற கள உத்தியோகத்தர்களின் கடமைகளின் முன்னேற்றத்தினை அளவுரீதியாகவும், தரரீதியாகவும் அளவிடுவதற்கான மற்றும் தொடராய்வு செய்வதற்கான முறைமையொன்றை அறிமுகப்படுத்தல்.	1	பிரதேச செயலகங்களிலிருந்து தேவையான தகவல்கள் பெறப்பட்டுள்ளதுடன் மாதிரி தரவுப் பத்திரமொன்று வரைவு செய்யப்பட்டு அது குழுவின் தலைவருக்கு மேலதிக அவதானத்திற்காக முன்வைக்கப்பட்டுள்ளது.
4	பிரதேச செயலகங்களில் சேவையாற்றுகின்ற கள உத்தியோகத்தர்களின் கடமைகள் சம்பந்தமாக பொதுமக்களுக்கு அறிவுறுத்துவதற்கு மற்றும் அந்த கள உத்தியோகத்தர்களுக்கு ஏற்புடைய விடய அம்சங்கள் தொடர்பாக ஏனைய தரப்பினர் அறிந்துகொள்வதற்காக கையேடொன்றை உருவாக்குதல்.	2	குழுக் கலந்துரையாடல்கள் ஊடாக முன்னுரிமை வழங்க வேண்டிய 12 விடயத் துறைகள் இனங்காணப்பட்டன. ஆரம்ப வரைவுகள் தயாரிக்கப்பட்டு அமைச்சுக்களின் அவதானிப்புக்கள்.. இணக்காப்பாட்டிற்காக அனுப்பி வைக்கப்பட்டுள்ளது.

#	குழு	நடாத்தப்பட்டுள்ள கூட்டங்களின் எண்ணிக்கை	முன்னேற்றம்
5	பிரதேச செயலகங்களில் சேவையாற்றுகின்ற கள உத்தியோகத்தர்களின் சேவைப் பிரமாணக் குறிப்புக்கள் மற்றும் ஆட்சேர்ப்புத் திட்டங்களில் நிலவுகின்ற சிக்கல்களைத் தீர்த்தல் மற்றும் இந்த உத்தியோகத்தர்களின் கொள்திறனை அபிவிருத்தி செய்தல்.	1	தேவையான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படுகின்றன.

"பிரதேச நிர்வாகத்தின் சேவை வழங்கல் மேம்படுத்தல்" நிகழ்ச்சித்திட்டம் ஜூலை மாதம் நிறைவடைய உத்தேசிக்கப்பட்டிருப்பினும் நாட்டில் நிலவும் கொவிட் தொற்று நிலைமை காரணமாக உரிய திகதியில் நிறைவு செய்ய முடியாமற் போனது.

- **கௌரவ பிரதம அமைச்சரின் தலைமையில் இடம்பெறும் கூட்டங்களில் வழங்கப்படுகின்ற முடிவுகள், தீர்மானங்கள் சம்பந்தமாக தொடராய்வுகளைச் செய்தல்**

கௌரவ பிரதம அமைச்சரின் தலைமையில் இடம்பெறும் கூட்டங்களில் வழங்கப்படுகின்ற முடிவுகள், தீர்மானங்களைச் செயற்படுத்துவது சம்பந்தமாக தொடராய்வுகளைச் செய்யும் அலுவல்கள் அபவிருத்திப் பிரிவினால் மேற்கொள்ளப்படுகின்றன. அதற்கேற்ப 2021 ஆம் ஆண்டில் நடாத்தப்பட்ட 47 கூட்டங்கள் மற்றும் கலந்துரையாடல்களின் ஆரம்ப தொடராய்வு அலுவல்கள்

செய்யப்பட்டு நிறைவு செய்யப்பட்டுள்ளதுடன், 46 கூட்டங்களின் ஆரம்ப தொடராய்வு அலுவல்கள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

- **கௌரவ பிரதம அமைச்சர் அவர்கள் அமைச்சுப் பதவி வகிக்கின்ற அமைச்சுக்களின் முன்னேற்றத்தை மீளாய்வு செய்தல்**

கௌரவ பிரதம அமைச்சர் அவர்கள் அமைச்சுப் பதவி வகிக்கின்ற அமைச்சுக்களின் பணிகளை முறையாகப் பேணிச் செல்வதற்குத் தேவையான தொடராய்வு அலுவல்கள் இப்பிரிவினால் மேற்கொள்ளப்படுகின்றன.

கௌரவ பிரதம அமைச்சர் அவர்கள் அமைச்சுப் பதவி வகிக்கின்ற அமைச்சுக்கள்

- பொருளாதாரக் கொள்கைகள் மற்றும் திட்டச் செயற்படுத்துகை அமைச்சு
- புத்தசாசன, சமய மற்றும் கலாச்சார அலுவல்கள் அமைச்சு
  - க. தேசிய மரபுரிமைகள், அருங்கலைகள் மற்றும் கிராமிய சிற்பக் கலைகள் மேம்பாட்டு அலுவல்கள் இராஜாங்க அமைச்சு
- நகர அபிவிருத்தி மற்றும் வீடமைப்பு அமைச்சு
  - க. நகர அபிவிருத்தி, கரையோரப் பாதுகாப்பு, கழிவுப்பொருள் அகற்றுகை மற்றும் சமுதாய தூய்மைப்படுத்தல் இராஜாங்க அமைச்சு
  - கை. கிராமிய வீடமைப்பு மற்றும் நிர்மாணத்துறை மற்றும் கட்டிடப்பொருட் கைத்தொழில் மேம்பாட்டு இராஜாங்க அமைச்சு
  - கைை. தோட்ட வீடமைப்பு மற்றும் சமுதாய உட்கட்டமைப்பு வதிகள் இராஜாங்க அமைச்சு

இதற்கு மேலதிகமாக 2021.07.08 ஆந் திகதி வரை கௌரவ பிரதம அமைச்சர் அவர்கள் நிதியமைச்சர் பதவியையும் வகித்தார். அது வரை நிதியமைச்சு மற்றும் அதன் கீழ் காணப்பட்ட திணைக்களங்கள் மற்றும் இணைந்த நிறுவனங்களில் நடாத்தப்பட்ட கூட்டங்களிலும் இந்தப் பிரிவு கலந்துகொண்டது.

❖ அரச சேவையின் சேவை வழங்கலை வினைத்திறன்மிக்கதாவும், நட்புறவான முறையிலும் நடாத்திச் செல்லுதல் மற்றும் டிஜிட்டல்மயப்படுத்தல்

பொதுமக்களுக்கு அரச சேவைகளை வழங்குவதன் வினைத்திறனில் நிலவும் பல்வேறுபட்ட சிக்கல்கள் சம்பந்தமாக உரையாடலொன்று உருவாகியுள்ள பின்னணியில், கௌரவ பிரதம அமைச்சர் மற்றும் பொருளாதாரப் புத்தெழுச்சி மற்றும் வறுமை ஒழிப்புக்கான ஜனாதிபதி செயலணியின் தலைவர் கௌரவ பசில் ராஜபக்‘ அவர்களின் வழிகாட்டலின்டி அரச சேவையின் வழங்கலை வினைத்திறன்மிக்கதாகவும், நட்புறவான முறையிலும் பேணிச் செல்வது தொடர்பாக அதிக கவனஞ் செலுத்தப்பட்டுள்ளது. இதில் பொதுமக்களுக்கு நேரடியாக சேவைகளை வழங்குகின்ற பிரதான அமைச்சுக்கள்.ˑ. திணைக்கள மட்டத்திலிருந்து கீழ் மட்டம் வரை சேவைகளை வழங்குகின்ற பிரதேச செயலகங்கள், பொலிஸ் போன்ற பல்வேறு நிறுவனங்களில் அரச சேவை வழங்கலின் வினைத்திறன் தொடர்பாக பிரதம அமைச்சர் அலுவலகத்தின் தலையீட்டுடன் கணக்கெடுப்பொன்று நடாத்தப்பட்டது. அந்தக் கணக்கெடுப்பில் இனங்காணப்பட்ட சிக்கல்களுக்கு, தற்போது உள்ள முறைமைகளில் தொழிநுட்பத் தீர்வுகளை வழங்குவதன் ஊடாக உற்பத்தித்திறனை மேம்படுத்தும் நோக்கத்துடன் பொதுமக்களுக்கு நேரடியாக சேவைகளை வழங்குகின்ற நிறுவனங்களுடன் கலந்துரையாடல் தொடரொன்று இளைஞர் மற்றும் விளையாட்டுத்துறை அமைச்சர், டிஜிட்டல் தொழிநுட்ப மற்றும் தொழில்முயற்சிகள் அபிவிருத்தி இராஜாங்க அமைச்சர் மற்றும் கிராமத்துடனான உரையாடல் கிராமிய அபிவிருத்தி ஜனாதிபதி செயலணியின் தலைவர் கௌரவ நாமல் ராஜபக்‘ அவர்களின் தலைமையில் ஆரம்பிக்கப்பட்டது.

மேலும் ஒவ்வொரு நிறுவனத்தினாலும் தனித்தனியாக நிறுவனரீதியாக தரவுகளைச் சேகரிக்கும் நிகழ்ச்சித்திட்டங்கள் செயற்படுத்தப்படுவதாக நேரடியாக சேவைகளை வழங்குகின்ற நிறுவனங்களுடன் நடாத்தப்பட்ட கலந்துரையாடல்களில் இனங்காணப்பட்டது. இதன் மூலம் பணி இரட்டைப்படுத்தப்படுதல், அரச அதிகாரிகள் மற்றும் பொதுமக்களின் நேரம் வீண்விரயமாதல், ஏனைய உற்பத்தித்திறன்மிக்க பணிகளில் ஈடுபடுத்துவதற்கு காணப்படும் வளங்கள் வீண்விரயமாதல் போன்ற பிரதிகூலமான நிலைமைகள் ஏற்பட்டுள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டது. எனவே, நிறுவனரீதியாக தனித்தனியான செயற்படுத்தப்படுகின்ற தரவுச் சேகரிப்பு நிகழ்ச்சித்திட்டங்களுக்குப் பதிலாக பொதுவான தரவுச் சேகரிப்பு நிகழ்ச்சித்திட்டத்தை ஆரம்பிக்கும் ஆற்றல் சம்பந்தமாக ஆராய்வதற்கும், அவ்வாறான நிகழ்ச்சித்திட்டமொன்றுக்கு அடிப்படையை இடுவதற்கும் 06 கூட்ட அமர்வுகள் தற்போது நடாத்தப்பட்டு நிறைவு செய்யப்பட்டுள்ளன.

அத்துடன், மேற்குறித்த கலந்துரையாடல் தொடருடன் இணைந்த வகையில், தற்போது வினைத்திறனான, நட்புறவான அரச சேவை வழங்கலை நோக்கமாகக் கொண்டு அரச நிறுவனங்களினால் வழங்கப்படுகின்ற சேவைகளை டிஜிட்டல்மயப்படுத்துவதற்காக அந்த அரச நிறுவனங்கள் மூலம் ஏலவே செயற்படுத்தப்படுகின்ற தகவல் தொழிநுட்பக் கருத்திட்டங்கள் மீது விசேட கவனம் ஈர்க்கப்பட்டது. அதற்கேற்ப, கௌரவ பிரதம அமைச்சரின் வழிகாட்டலின் கீழ் அந்த தகவல் தொழிநுட்பக் கருத்திட்டங்களின் தற்போதைய நிலைமை மற்றும் எதிர்கால செல்வழி சம்பந்தமாக கலந்துரையாடல் தொடரொன்று இளைஞர் மற்றும் விளையாட்டுத்துறை அமைச்சர், டிஜிட்டல் தொழிநுட்ப மற்றும் தொழில்முயற்சிகள் அபிவிருத்தி இராஜாங்க அமைச்சர் மற்றும் கிராமத்துடனான உரையாடல் கிராமிய அபிவிருத்தி ஜனாதிபதி செயலணியின் தலைவர் கௌரவ நாமல் ராஜபக்‘ அவர்களின் தலைமையில் ஆரம்பிக்கப்பட்டுள்ளதுடன், அதற்கு ஏற்புடையவாறு இது வரை நடாத்தப்பட்ட கூட்டங்கள் சம்பந்தமான தகவல்களின் சாராம்சம் கீழே காட்டப்பட்டுள்ளது.

அரச சேவையின் சேவை வழங்கலை டிஜிட்டல்மயப்படுத்துவது தொடர்பாக நடாத்தப்பட்டுள்ள கூட்டங்கள்.ˑ. கலந்துரையாடல்கள்

கூட்ட இலக்கம்	தலைப்பு	திகதி
1	இலங்கை பொலிசாரின் சேவை வழங்கலை டிஜிட்டல்மயப்படுத்துவது தொடர்பான கலந்துரையாடல்	2021.05.21
2	நீதியமைச்சின் கீழ் காணப்படும் தகவல் தொழிநுட்பக் கருத்திட்டங்கள் தொடர்பான கலந்துரையாடல்	2021.05.24
3	சிறைச்சாலைகள் திணைக்களத்தின் சேவை வழங்கலை டிஜிட்டல்மயப்படுத்துவது தொடர்பான கலந்துரையாடல்	2021.05.28
4	ளுழஉயைட ளுயகநவல நேவறழசம மற்றும் தேசிய திட்டமிடல் திணைக்களத்துடனான கலந்துரையாடல்	2021.06.16
5	நீதியமைச்சு மற்றும் சிறைச்சாலைகள் திணைக்களத்தின் அலுவல்களை டிஜிட்டல்மயப்படுத்துவது தொடர்பான முன்னேற்ற மீளாய்வுக் கலந்துரையாடல்	2021.06.28
6	1). பிம் சவிய கருத்திட்டம் மற்றும் அதன் எதிர்கால செல்வழி தொடர்பான கலந்துரையாடல் 2). ஆட்பதிவுத் திணைக்களம் :இலங்கை தனித்துவமான டிஜிட்டல் அடையாள அட்டைக் கருத்திட்டம்	2021.07.06

கூட்ட இலக்கம்	தலைப்பு	திகதி
7	இலங்கையின் தேசிய இடஞ்சார் தரவு உட்கட்டமைப்பு வசதிகள் சம்பந்தமான கலந்துரையடல் (யேவழையெட ளுியவயைட னுயவய ஐகெசயளவசரஉவரசந - ளுேனுஐ)	2021.07.07
8	இலங்கையின் சமூக பாதுகாப்புக் கருத்திட்டங்கள் தொடர்பான முன்னிலைப்படுத்தல் ீசநளநவெயவழைெ ழஎ வாந யளளநளளஅநவெ ழக நஒளைவவைபெ ளுழஉயைட ீசழவநஉவழைெ ீசழபசயஅள)	2021.07.20

❖ உயர் விளைதிறன்மிக்க இளைஞர் வியாபாரக் கிராமங்கள் கருத்திட்டம்

- **அறிமுகம்**

இளைஞர் வறுமையை நீண்ட காலத்தில் ஒழிப்பதற்காக முறையான வேலைத்திட்டமொன்றைச் செயற்படுத்தல் மற்றும் சமூகத்தை வலுவூட்டுவதற்கான பொருத்தமான பொறிமுறையொன்றின் தேவை இனங்காணப்பட்டுள்ளது. இதற்கேற்ப நவீன சந்தை மற்றும் தொழிநுட்பம் தொடர்பாக கவனஞ் செலுத்தி இளைஞர் சமூகத்தினை வலுவூட்டுவதற்கான பொருத்தமான வேலைத்திட்டமொன்றைச் செயற்படுத்துவதற்கான ஆரம்ப கட்ட நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டியுள்ளது.

கௌரவ பிரதம அமைச்சரின் வழிகாட்டலின் கீழ், இளைஞர் அலுவல்கள் மற்றும் விளையாட்டுத்துறை அமைச்சர் மற்றும் டிஜிட்டல் தொழிநுட்பம் மற்றும் தொழில்முயற்சி அபிவிருத்தி இராஜாங்க அமைச்சர் கௌரவ நாமல் ராஜபக்‘ அவர்களின் எண்ணக்கருவுக்கு ஏற்ப உயர் விளைதிறன்மிக்க இளைஞர் வியாபாரக் கிராமங்களை முழு நாடும் உள்ளடங்கும் வகையில் நிறுவுவதற்கு உத்தேசிக்கப்பட்டுள்ளது. இந்தக் கருத்திட்டத்தை பொருளாதாரப் புத்தெழுச்சி மற்றும் வறுமை ஒழிப்புக்கான ஜனாதிபதி செயலணி, பிரதம அமைச்சர் அலுவலகம் மற்றும் இளைஞர் மற்றும் விளையாட்டுத்துறை அமைச்சின் தலைமையில் ஏற்புடைய அமைச்சுக்கள், திணைக்களங்கள் மற்றும் ஏனைய நிறுவனங்களின் ஒத்துழைப்புடன் செயற்படுத்துவதற்கு எதிர்பார்ப்பதுடன், இதன்

முன்னோடித் திட்டத்தை பொலன்னறுவை, மொனறாகலை, கிளிநொச்சி ஆகிய மாவட்டங்களில் எதிர்காலத்தில் செயற்படுத்த உத்தேசிக்கப்பட்டுள்ளது.

- **நோக்கம்**

இளைஞர் யுவதிகள் மத்தியில் வறுமையைக் குறைத்தல் மற்றும் மின் வணிக (ந-உழஅஅநசஉந) முறைகள் ஊடாக சமூக அபிவிருத்தியை நோக்கி இளைஞர் சமூகத்தினை ஈடுபடுத்துவது இந்தக் கருத்திட்டத்தின் பிரதான நோக்கமாகும். இதற்கு மேலதிகமாக பின்வரும் நோக்கங்களையும் இந்தக் கருத்திட்டம் ஊடாக அடைந்துகொள்ள எதிர்பார்க்கப்படுகிறது.

– வாழ்வாதார வழிமுறைகளை ஏற்படுத்தல்.

– இளைஞர்கள் மத்தியில் தொழில்முயற்சிக் கலாசாரமொன்றைப் பிரபல்யப்படுத்தல்.

– சர்வதேச போக்குகளுக்கு ஏற்ப இளைஞர் கிராமங்களை நவீனமயப்படுத்தல்.

– காபன் உமிழ்வு அற்ற இளைஞர் கிராமங்களை ஊக்குவித்தல்.

– இளம் குடும்பங்களின் வாழ்க்கை நிலைமையினை மேம்படுத்தல்.

– தேசிய அபிவிருத்திக்காக இளைஞர் யுவதிகளை வலுவூட்டும் பொருட்டு தொழிநுட்பத்தை அடிப்படையாகக் கொண்ட தீர்வுகளை வழங்குதல்.

- **மேற்கொள்ளப்பட்டுள்ள பணிகள்**

  - இந்தக் கருத்திட்டம் சம்பந்தமாக அரச நிறுவனத் தலைவர்கள் மற்றும் சகல தரப்பு நிறுவனங்களுக்கும் விழிப்புணர்வளிப்பதற்காக இளைஞர் அலுவல்கள் மற்றும் விளையாட்டுத்துறை அமைச்சர் மற்றும் டிஜிட்டல் தொழிநுட்பம் மற்றும் தொழில்முயற்சி அபிவிருத்தி இராஜாங்க அமைச்சர் கௌரவ நாமல் ராஜபக்‘ அவர்களின் தலைமையில், அந்தந்த விடயத்துக்குப் பொறுப்பான அரச அதிகாரிகளின் பங்கேற்புடன் கூட்டங்கள் நடாத்தப்பட்டன.

- இந்தக் கருத்திட்டத்தின் முன்னோடிக் கருத்திட்டத்தை செயற்படுத்துவதற்கு உத்தேசிக்கப்பட்டுள்ள பொலன்னறுவை, மொனறாகலை, கிளிநொச்சி ஆகிய மாவட்டங்களில் மாவட்டச் செயலாளர்கள் ஊடாக பொருத்தமான மூன்று காணிகள் இது வரை இனங்காணப்பட்டுள்ளன.

இந்தக் கருத்திட்டம் சம்பந்தமாக தற்போது நடாத்தப்பட்டுள்ள கூட்டங்கள்∴ மேற்கொள்ளப்பட்டுள்ள செயற்பாடுகள் கீழே தரப்பட்டுள்ளன.

இலக்கம்	நோக்கம்	திகதி
1	இளைஞர் அலுவல்கள் மற்றும் விளையாட்டுத்துறை அமைச்சர் கௌரவ நாமல் ராஜபக்‘ அவர்களினால் ”உயர் விளைதிறன்மிக்க இளைஞர் வியாபாரக் கிராமங்கள் கருத்திட்டம்” தொடர்பான எண்ணக்கருவை தொடர்புடைய நிறுவனங்களின் அமைச்சர்கள் மற்றும் அதிகாரிகளுக்கு அறிமுகப்படுத்தல்	2021.04.22
2	”உயர் விளைதிறன்மிக்க இளைஞர் வியாபாரக் கிராமங்கள் கருத்திட்டத்திற்கு” ஏற்புடைய எண்ணக்கருப் பத்திரத்தைத் தயாரிப்பது சம்பந்தமான ஆரம்பக் கலந்துரையாடலுக்காக குழு அங்கங்கத்தவரகள் ஒன்றுகூடுதல்	2021.04.23
3	‘‘உயர் விளைதிறன்மிக்க இளைஞர் வியாபாரக் கிராமங்கள் கருத்திட்டம்” சம்பந்தமாகத் தயாரிக்கப்பட்ட எண்ணக்கருப் பத்திரத்தின் இறுதி வரைவு தொடர்பான கலந்துரையாடல்	2021.04.27
4	‘‘உயர் விளைதிறன்மிக்க இளைஞர் வியாபாரக் கிராமங்கள் கருத்திட்டத்திற்கு” ஏற்புடைய எண்ணக்கருப் பத்திரத்தை இளைஞர் அலுவல்கள் மற்றும் விளையாட்டுத்துறை அமைச்சர் கௌரவ நாமல் ராஜபக்‘ அவர்களுக்கு கையளித்தல்	2021.05.03

இலக்கம்	நோக்கம்	திகதி
5	பொலன்னறுவை மாவட்டத்திற்கு ஏற்புடையவாறு இனங்காணப்பட்ட நிலப் பகுதியை அவதானித்தல் மற்றும் இடப் பரிசோதனையைச் செய்தல்	2021.05.30
6	”உயர் விளைதிறன்மிக்க இளைஞர் வியாபாரக் கிராமங்கள் கருத்திட்டத்தின்” எதிர்கால செல்வழியைத் தீர்மானிக்கும் கலந்துரையாடல்	2021.07.05
7	பொலன்னறுவை மாவட்டத்திற்கு ஏற்புடையவாறு இனங்காணப்பட்ட நிலத்தைப் பரிசோதிப்பதற்கு களப் பரிசோதனையொன்றை ஏற்பாடு செய்வதற்காக ஏற்புடைய தரப்பு நிறுவனத் தலைவர்கள் மற்றும் அவர்களின் பெயரிடப்பட்ட பிரதிநிதிகளின் தலைமையில் நடாத்தப்பட்ட கலந்துரையாடல்	2021.07.07
8	உரிய தரப்பு நிறுவனங்கள் சார்பில் அவற்றின் பிரதிநிதிகளினால் மேற்கொள்ளப்பட்ட களப் பரிசோதனை	2021.07.09
9	உயர் விளைதிறன்மிக்க இளைஞர் வியாபாரக் கிராமங்கள் கருத்திட்டம் தொடர்பான முன்னேற்ற மீளாய்வுக் கலந்துரையாடல்	2021.08.19
10	மாதிரிக் கிராமம் நிறுவப்படவுள்ள பொலன்னறுவை ரிதீதென்ன பிரதேசத்தில் மேற்கொள்ளப்பட்ட களப் பரிசோதனை தொடர்பாக ஒன்லைனில் நடாத்தப்பட்ட கலந்துரையாடல்	2021.08.26
11	உத்தேச இளைஞர் கிராமங்கள் கருத்திட்டத்தின் பிரதான திட்டத்தைச் சமர்ப்பிப்பதற்கு ஏற்புடையவாறு நடாத்தப்பட்ட கலந்துரையாடல் (சநளநவெயவழைெ ழெ வாந ஆயளவநச ீடயெ ழக வாந ிசழிழளநன சுநனநவாநயெை ர்பா ஐஅியஉவ லுழரவா நுவெநசிசளைந ஏடைடயபந)	2021.09.01
12	உயர் விளைதிறன்மிக்க இளைஞர் வியாபாரக் கிராமங்கள் கருத்திட்டம் தொடர்பான முன்னேற்ற மீளாய்வு – பிரதான திட்டம் தொடர்பான கலந்துரையாடல்	2021.09.13
13	பொலன்னறுவை மாவட்டத்தின் எல்லையில் அமைந்துள்ள ரிதீதென்ன பிரதேசத்தில் நிறுவப்படவுள்ள இளைஞர்	2021.09.17

இலக்கம்	நோக்கம்	திகதி
	வியாபாரக் கிராமங்கள் கருத்திட்டம் தொடர்பான முன்னேற்ற மீளாய்வு	
14	மத்திய சுற்றாடல் அதிகாரசபையினால் நடாத்தப்படுகின்ற சூழல் அனுமதி தொடர்பான கலந்துரையாடல்	2021.09.24
15	உத்தேச இளைஞர் கிராமங்கள் கருத்திட்டத்தின் பிரதான திட்டத்தில் செய்ய வேண்டிய திருத்தங்கள் தொடர்பாக உரிய தரப்பு நிறுவனங்களுக்கு விழிப்புணர்வளிப்பதற்காக நடாத்தப்பட்ட கலந்துரையாடல்	2021.09.29
16	வெள்ள சமவுயரக் கோட்டுப் படங்களுக்கு ஏற்ப அமைப்புத்திட்டங்களை நிறைவு செய்வது தொடர்பான கலந்துரையாடல்	2021.12.22

2.1.2 திட்டமிடல் அலுவல்கள்

❖ **பிரதம அமைச்சர் அலுவலகத்தின் வருடாந்த செயல் திட்டத்தைத் தயாரித்தல்**

எந்தவொரு நிறுவனத்தினதும் முறையான முகாமைத்துவத்திற்குப் பயனுறுதிவாய்ந்த திட்டமிடல் முக்கியமானதாகும். அதற்கேற்ப பிரதம அமைச்சர் அலுவலகத்திலும் எதிர்கால நடவடிக்கைகள் செயற்படுத்தப்படும் முறையை வெளிப்படுத்தும் வருடாந்த செயல் திட்டமொன்றைத் தயாரிப்பதற்கு ஏற்புடையவாறு எதிர்கால நிகழ்ச்சித்திட்டங்கள் மற்றும் கருத்திட்டங்களை இனங்காண வேண்டியுள்ளது. அதில் அலுவலகத்தின் ஒவ்வொரு பிரிவுடனும் ஒருங்கிணைப்புச் செய்து இந்தப் பிரிவுகள் மேற்கொள்வதற்கு எதிர்பார்த்துள்ள நிகழ்ச்சித்திட்டங்களை இனங்காணுதல், அந்த நிகழ்ச்சித்திட்டங்களுக்கு ஏற்புடைய தகவல்களைப் பெற்றுக்கொள்ளுதல், அந்த நிகழ்ச்சித்திட்டங்கள் தொடர்பான முன்னேற்றத்தை அளவிடுவதற்கான சுட்டிகளை இனங்காண வேண்டியுள்ளது. மேற்குறித்த பணிகளை மேற்கொண்டு பிரதம அமைச்சர் அலுவலகத்தின் வருடாந்த செயல்திட்டம் திட்டமிடல் பிரிவினால் தயாரிக்கப்படுகிறது. அதற்கேற்ப 2021 ஆம் ஆண்டிற்கான ஏற்புடைய செயல்திட்டம் உரிய திகதியில் தயாரிக்கப்பட்டு சமர்ப்பிக்கப்பட்டது.

❖ **வருடாந்த செயல்திட்டத்தின் அடிப்படையில் வருடத்தின் சகல காலாண்டுகளுக்குமான முன்னேற்ற அறிக்கைகளைத் தயாரித்தல்**

பிரதம அமைச்சர் அலுவலகத்தின் நோக்கங்களை அடைந்துகொள்வதற்காக ஒவ்வொரு பிரிவினாலும் செய்யப்படுகின்ற செயற்பாடுகளின் முன்னேற்றத்தை அளவிடுவது முக்கியமானதாகும். எனவே, பிரதம அமைச்சர் அலுவலகத்தின் உள்ளக கணக்காய்வுப் பிரிவுக்கு வழங்குவதற்காக காலாண்டுரீதியாக ஒவ்வொரு பிரிவினாலும் செய்யப்படும் செயற்பாடுகளின் முன்னேற்றத்தை அளவிடும் நோக்கத்துடன், திட்டமிடல் பிரிவினால் காலாண்டுரீதியான முன்னேற்ற அறிக்கைகள் தயாரிக்கப்படுகின்றன. அதற்கேற்ப 2021.01.01 ஆந் திகதி 2021.12.31 ஆந் திகதி ஏற்புடைய சகல காலாண்டு முன்னேற்ற அறிக்கைகளையும் தயாரித்து உரிய திகதிக்கு முன்பு அவை சமர்ப்பிக்கப்பட்டுள்ளன.

❖ **வருடாந்த முன்னேற்ற அறிக்கையைத் தயாரித்தல்**

சகல அமைச்சுக்கள், திணைக்களங்கள் நடைமுறை ஆண்டின் முதல் மூன்று காலாண்டுகளிலும் மேற்கொண்ட செயற்பாடுகளின் முன்னேற்றம் உள்ளடங்கிய முன்னேற்ற அறிக்கையொன்றை மூன்று மொழிகளிலும் தயாரித்து பாராளுமன்ற வரவுசெலவுத்திட்ட விவாதத்தின்போது சபையில் முன்வைப்பதற்காக சமர்ப்பிக்க வேண்டும். அதற்கேற்ப பிரதம அமைச்சர் அலுவலகத்தின் வருடாந்த முன்னேற்ற அறிக்கையைத் தயாரிக்கும் ஆரம்ப சந்தர்ப்பத்திலிருந்து பாராளுமன்றத்தில் வரவுசெலவுத்திட்ட செயற்குழுவுக்கு சமர்ப்பிக்கப்படும் வரையான ஒட்டுமொத்த அலுவல்களும் திட்டமிடல் பிரிவினால் ஒருங்கிணைக்கப்படுகிறது. அதற்காக ஒவ்வொரு பிரிவினாலும் மேற்கொள்ளப்படும் செயற்பாடுகளின் முன்னேற்றம் உள்ளடங்கிய அறிக்கைகளைப் பெற்று மூன்று மொழிகளிலும் முன்னேற்ற அறிக்கையைத் தயாரித்தல், அச்சிடுதல் ஆகிய சகல பணிகள் மற்றும் ஒருங்கிணைப்பு என்பன திட்டமிடல் பிரிவினால் மேற்கொள்ளப்படுகின்றன.

❖ **வருடாந்த செயற்திறன் அறிக்கை வரைவு மற்றும் செயற்திறன் அறிக்கையைத் தயாரித்தல்**

2002.09.12 ஆந் திகதிய 402 ஆம் இலக்க நிதிச் சுற்றறிக்கையின் 2.4 ஆம் பந்தியின் ஏற்பாடுகளுக்கு அமைவாக சகல அமைச்சுக்கள், திணைக்களங்கள் கணக்கு ஆண்டு முடிவடைந்து 150 நாட்களினுள் வருடாந்த செயற்திறன் அறிக்கைகளைத் தயாரித்து பாராளுமன்றத்திற்கு சமர்ப்பிக்க வேண்டும். மேற்குறித்த ஏற்பாடுகளின் அடிப்படையில் பிரதம அமைச்சர் அலுவலகத்தின் செயற்திறன் அறிக்கையைத் தயாரிக்கும் ஆரம்ப சந்தர்ப்பம் முதல் பாராளுமன்றத்தில் சமர்ப்பிப்பது வரையான ஒட்டுமொத்த அலுவல்களும் திட்டமிடல் பிரிவினால் மேற்கொள்ளப்படுவதுடன் 2020 ஆம் ஆண்டின் செயற்திறன் அறிக்கையின் வரைவு கணக்காய்வாளர் நாயகத்திற்கும், செயற்திறன் அறிக்கை பாராளுமன்றத்திற்கும் உரியவாறு சமர்ப்பிக்கப்பட்டுள்ளது.


❖ **பிரதம அமைச்சர் அலுவலகத்தின் நிலைபேறான அபிவிருத்தி நோக்கங்களை (ளுனுபு'ள) அடைந்துகொள்வதன் செயற்திறன் அறிக்கையைத் தயாரித்தல்**

2015 இல் இடம்பெற்ற ஐக்கிய நாடுகள் சபையின் அமர்வில் மேற்கொள்ளப்பட்ட தீர்மானத்திற்கு ஏற்ப 2030 ஆம் ஆண்டாகும்போது இலங்கை உட்பட 192 நாடுகள் 169 இலக்குகள் ஊடாகப் பூர்த்தி செய்ய வேண்டிய 17 நோக்கங்களை அடைந்துகொள்வதற்காக இணக்கப்பாடொன்று ஏற்படுத்தப்பட்டது. அதற்கேற்ப பிரதம அமைச்சர் அலுவலகமும் இந்த நிகழ்ச்சிட்டத்துடன் ஒருங்கிணையும் வகையில் நிலைபேறான அபிவிருத்தி நோக்கங்களை அடைந்துகொள்வதற்காக சகல பிரிவுகளினதும் பணி அலுவல்களை அந்த நோக்கங்களை நோக்கி ஈடுபடுத்துவது மற்றும் அந்த நோக்கங்களை அடைந்துகொள்வதன் செயற்திறனை அளவிடுவது முக்கியமானதாகும். அதற்கேற்ப 2020 ஆம் ஆண்டிற்காக பிரதம அமைச்சர் அலுவலகத்தின் நிலைபேறான அபிவிருத்தி இலக்குகளை அடைந்துகொள்வதன் செயற்திறன் அறிக்கை உரியவாறு தயாரிக்கப்பட்டு சமர்ப்பிக்கப்பட்டது.

2.2 தாபன மற்றும் விசேட அலுவல்கள் பிரிவு

கௌரவ பிரதம அமைச்சருக்குத் தனிப்பட்டரீதியில் கிடைக்கின்ற கடிதங்கள் மற்றும் விசேட கவனத்தை ஈர்ப்பதற்காக பிரதம அமைச்சர் அலுவலகத்திற்கு கிடைக்கின்ற கடிதங்கள் தொடர்பான அலுவல்களைச் செய்தல், கௌரவ பிரதம அமைச்சரின் ∴ பிரதம அமைச்சரின் செயலாளரின் தலைமையில் இடம்பெறும் கூட்டங்களை ஏற்பாடு செய்தல் மற்றும் பாராளுமன்றம் மற்றும் அமைச்சரவை அலுவல்கள் சம்பந்தமாக பணியாற்றுதல் என்பன தாபன மற்றும் விசேட அலுவல்கள் பிரிவின் பிரதான கடமைப்பொறுப்பு ஆகும்.

இந்தப் பிரிவின் கீழ் பின்வருமாறு 03 உப அலகுகள் செயற்படுகின்றன.



2.2.1 விசேட அலுவல்கள் பிரிவு

கிடைக்கின்ற கடிதங்களுக்குப் பின்வருமாறு இப்பிரிவினால் தேவையான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படுகின்றன.

i. கௌரவ பிரதம அமைச்சர் அவர்களுக்குத் தனிப்பட்ட முறையில் கையளிக்கப்படும் கடிதங்கள்

ii. பிரதம அமைச்சரின் செயலாளர் ஊடாக அனுப்பி வைக்கப்படுகின்ற கடிதங்கள்

iii. பாராளுமன்றம், மாகாண சபைகள், உள்;ராட்சி நிறுவனங்களைப் பிரதிநித்துவப்படுத்துகின்ற அரசியல்வாதிகளிடமிருந்து கிடைக்கும் கோரிக்கைக் கடிதங்கள்

iv. பிரதம அமைச்சர் அலுவலகத்திற்கு அஞ்சல் மூலம் கிடைக்கின்ற விசேட கவனத்தைச் செலுத்த வேண்டிய கோரிக்கைக் கடிதங்கள்



அதற்கேற்ப 2021 ஜனவரி 01 ஆந் திகதி முதல் டிசம்பர் 31 ஆந் திகதி வரை கிடைத்த 4956 கடிதங்கள் தொடர்பான அலுவல்கள் செய்யப்பட்டுள்ளன.

இதற்கு மேலதிகமாக, அரச நியதிச்சட்ட நிறுவனங்கள், கூட்டுத்தாபனங்கள், சபைகள் போன்றவற்றுக்கு நியமிப்பற்கு கௌரவ பிரதம அமைச்சர் அவர்களினால் செய்யப்படுகின்ற விதந்துரைகளை ஜனாதிபதி செயலகத்திற்கு அனுப்பி வைத்தல், கௌரவ பிரதம அமைச்சர் ∴ பிரதம அமைச்சரின் செயலாளரை சந்திப்பதற்கு வருகை தரும் விசேட நபர்களை சந்தித்தல், அவர்களுடன் கலந்துரையாடி ஏற்புடைய கோரிக்கைகள் சம்பந்தமாக தேவையான நடவடிக்கைகளை மேற்கொள்ளுதல்,

கௌரவ பிரதம அமைச்சர் அவர்கள் அமைச்சுப் பதவி வகிக்கின்ற அமைச்சுக்களுக்கு ஏற்புடைய அமைச்சரவை விஞ்ஞாபனங்கள்.. அமைச்சரவைக் குறிப்புக்களைப் பரீட்சித்து கௌரவ பிரதம அமைச்சரின் கையொப்பத்திற்கு முன்வைப்பதற்கு ஏற்புடைய ஒருங்கிணைப்பு அலுவல்களும் இப்பிரிவினால் மேற்கொள்ளப்படுகின்றன.

2.2.2 நிகழ்ச்சித்திட்ட முகாமைத்துவ அலகு

கௌரவ பிரதம அமைச்சர் அவர்களுக்கு பல்வேறுபட்ட அமைப்புக்கள், நிறுவனங்கள் மற்றும் நபர்களினால் கூட்டங்கள்.. கலந்துரையாடல்களுக்காக செய்யப்படும் கோரிக்கைகளுக்கு சாத்தியவள ஆய்வினைச் செய்தல், கௌரவ பிரதம அமைச்சர் .. பிரதம அமைச்சரின் செயலாளரின் தலைமையில் நடாத்தப்படுகின்ற கூட்டங்கள்.. கலந்துரையாடல்களை ஏற்பாடு செய்தல், ஏற்புடைய தரப்பினரை அழைத்து கூட்டங்களை நடாத்தி கூட்ட அறிக்கைகளைத் தயாரித்தல் இந்த அலகினால் மேற்கொள்ளப்படுவதுடன், 2021 ஜனவரி 01 ஆந் திகதி முதல் டிசம்பர் 31 ஆந் திகதி வரை சமய மற்றும் கலாசார அலுவல்கள், நகர அபிவிருத்தி மற்றும் வீடமைப்பு, வங்கி மற்றும் நிதி, கைத்தொழில்கள், கலை மற்றும் விளையாட்டு போன்ற பல்வேறுபட்ட துறைகள் தொடர்பாகவும், பல்வேறுபட்ட தொழில்சார் அதிகாரிகளின் பிரச்சினைகள் தொடர்பாகவும் 167 கூட்டங்கள் மற்றும் நிகழ்ச்சி அமர்வுகள் நடாத்தப்பட்டுள்ளன. இந்தக் காலப்பகுதியினுள் கூட்டங்கள் மற்றும் நிகழ்ச்சிகளுக்கு ஏற்புடைய 30 சாத்தியவள ஆய்வுகள் **(குநயளடிடைவைல ளுவரனல)** செய்யப்பட்டுள்ளன.



தாபன மற்றும் விசேட அலுவல்கள் பிரிவினால் 2021.01.01 ஆந் திகதி முதல் 2021.12.31 ஆந் திகதி வரை நடாத்தப்பட்ட கூட்டங்கள் மற்றும் நிகழ்ச்சிகளின் சாராம்சம் பின்வருமாறு.

மாதம்	கௌரவ பிரதம அமைச்சரின் தலைமையில் நடாத்தப்பட்ட கூட்டங்கள்	கௌரவ பிரதம அமைச்சரின் தலைமையில் நடாத்தப்பட்ட நிகழ்ச்சிகள்	மொத்தம்
ஜனவரி	9	-	9
பெப்ரவரி	10	-	10
மார்ச்	15	4	19
ஏப்ரல்	2	-	2
மே	4	5	9
ஜூன்	20	6	26
ஜூலை	17	6	23
ஆகஸ்ட்	2	1	3
செப்டம்பர்	6	-	6
ஒக்டோபர்	17	6	23
நவம்பர்	10	10	20
டிசம்பர்	10	7	17
மொத்தம்	**122**	**45**	**167**

2.2.3 பாராளுமன்ற மற்றும் அமைச்சரவை அலுவல்கள் அலகு

❖ அமைச்சரவை விஞ்ஞாபனங்கள்.ஃ. அமைச்சரவைக் குறிப்புக்கள் சம்பந்தமான அலுவல்கள்

கௌரவ பிரதம அமைச்சர் அவர்களினால் அமைச்சரவைக்கு சமர்ப்பிக்கப்படுகின்ற அமைச்சரவை விஞ்ஞாபனங்கள்.ஃ. குறிப்புக்களை வரைவு செய்து அமைச்சரவை அலுவலகத்திற்கு சமர்ப்பிப்பது வரையான செயன்முறையை நிறைவேற்றுதல் மற்றும் ஏற்புடைய ஒருங்கிணைப்பு அலுவல்களை மேற்கொள்ளுதல் இந்தப் பிரிவினால் மேற்கொள்ளப்படுகிறது.

அதற்கேற்ப 2021 ஜனவரி 01 ஆந் திகதி முதல் டிசம்பர் 31 ஆந் திகதி வரை பல்வேறுபட்ட விடயத் துறைகளுக்கு ஏற்புடையவாறு 22 அமைச்சரவை விஞ்ஞாபனங்கள், 14 அமைச்சரவைக் குறிப்புக்கள் அமைச்சரவைக்கு சமர்ப்பிக்கப்பட்டுள்ளன.

மேற்குறித்த அமைச்சரவைக் குறிப்புகள் மற்றும் விஞ்ஞாபனங்களை ஆராய்ந்து அமைச்சரவை மேற்கொள்ளும் தீர்மானங்களில், பிரதம அமைச்சரின் செயலாளரால் நிறைவேற்றப்பட வேண்டிய தீர்மானங்களை செயற்படுத்த வேண்டிய தீர்மானங்களை செயற்படுத்துவதற்குத் தேவையான நடவடிக்கைகளுக்காக ஏற்புடைய பிரிவுகளை அறிவுறுத்தல் இப்பிரிவினால் மேற்கொள்ளப்படுகிறது.



❖ **அமைச்சரவைப் பத்திரங்களின் சாராம்சக் குறிப்புக்களைத் தயாரித்தல்**

அமைச்சரவைக் கூட்ட அமர்வுகள் இடம்பெறுவதற்கு முன்பு அமைச்சரவை அலுவலகத்தினால் வாராந்தம் கௌரவ பிரதம அமைச்சரின் கவனத்தை ஈர்ப்பதற்காக அனுப்பி வைக்கப்படுகின்ற அமைச்சரவைப் பத்திரங்களில் உள்ளடங்கியுள்ள விடயங்களை சாராம்சப்படுத்தி பிரதம அமைச்சருக்கு மற்றும் பிரதம அமைச்சரின் செயலாளருக்கு வழங்க நடவடிக்கை மேற்கொள்ளப்படுகிறது. அதற்கேற்ப 2021.01.01 ஆந் திகதி முதல் 2020.12.31 ஆந் திகதி வரை 49 அமைச்சரவைப் பத்திர சாராம்சங்கள் தயாரிக்கப்பட்டுள்ளன.

❖ **அமைச்சரவைப் பத்திரங்கள் சம்பந்தமான தரவு அமைப்பினை இற்றைப்படுத்தி பேணிச் செல்லுதல்**

ஐ. சகல அமைச்சுக்களினாலும் தமது விடயப் பரப்புக்கு ஏற்புடைய பணிகள் சம்பந்தமாக அமைச்சரவைக்கு முன்வைக்கப்பட்ட அமைச்சரவை விஞ்ஞாபனங்கள்.ஃ குறிப்புக்கள், அவற்றுக்கு ஏற்புடைய அவதானிப்புக்கள் மற்றும் தீர்மானங்களையும் ஸ்கேன் செய்து (ளஉயெ) தரவு அமைப்பினுள் உட்படுத்தி இற்றைப்படுத்தல்.

ஐஐ. இற்றைப்படுத்தப்பட்ட தகவல்களை தேவை மற்றும் ஏற்புடைய அனுமதியின்படி வழங்குதல்.

❖ **பிரேரணை அங்கீகாரங்களைப் பாராளுமன்றத்திற்கு சமர்ப்பித்தல்**

அதிமேதகு ஜனாதிபதி அவர்களினால் வர்த்தமானி ஊடாகப் பிரகடனப்படுத்தப்படுகின்ற சட்டரீதியான பணிகள் நிறைவு செய்யப்பட்டுள்ள சட்ட வரைவுகள் சம்பந்தமாகவும், கௌரவ பிரதம அமைச்சரினால் பாராளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்பட வேண்டிய பிரேரணைகள் சம்பந்தமான பிரேரணை அங்கீகாரங்களைத் தயாரித்து பாராளுமன்றத்தின் அனுமதிக்காக சமர்ப்பிப்பது இந்தப் பிரிவினால் மேற்கொள்ளப்படுகின்றது. அதற்கேற்ப 2021.01.01 ஆந் திகதி முதல் 2021.12.31 ஆந் திகதி வரை 16 பிரேரணை அங்கீகாரங்கள் பாராளுமன்றத்திற்கு சமர்ப்பிக்கப்பட்டுள்ளன.

❖ பாராளுமன்ற வினாக்களுக்குப் பதிலளித்தல்

அதிமேதகு ஜனாதிபதி மற்றும் கௌரவ பிரதம அமைச்சரின் விடயப்பரப்புக்கு ஏற்புடையவாறு எதிர்க்கட்சி மற்றும் ஆளுங்கட்சி பாராளுமன்ற உறுப்பினர்களினால் 2021.01.01 முதல் 2021.12.31 வரை கௌரவ பிரதம அமைச்சர் அவர்களிடம் கேட்கப்பட்ட 31 வாய்மூல வினாக்களுக்குப் பதில்கள் வரைவு செய்யப்பட்டுள்ளன. அதற்கேற்ப,

- அதிமேதகு ஜனாதிபதி அவர்களின் விடயப் பரப்பின் கீழ் வருகின்ற ஜனாதிபதி அலுவலகத்துடன் தொடர்புடைய விடயங்கள் சம்பந்தமான வாய் மூலமான வினாக்கள் - 26

- கௌரவ பிரதம அமைச்சர் அவர்களின் விடயப் பரப்பின் கீழ் வருகின்ற பிரதம அமைச்சர் அலுவலகத்துடன் தொடர்புடைய விடயங்கள் சம்பந்தமான வாய் மூலமான வினாக்கள் - 05



அதிமேதகு ஜனாதிபதி மற்றும் கௌரவ பிரதம அமைச்சர் அமைச்சுப் பதவிகளை வகிக்கின்ற அமைச்சுக்களுக்கு ஏற்புடையவாறு பாராளுமன்ற உறுப்பினர்களினால் (எதிர்க்கட்சி மற்றும் ஆளுங்கட்சி) கௌரவ பிரதம அமைச்சர் அவர்களிடம் கேட்கப்பட்ட வாய்மூல வினாக்களுக்கு பிரதம அமைச்சர் அலுவலகத்தினால்

ஒருங்கிணைப்பு அலுவல்கள் மேற்கொள்ளப்பட்டுள்ள பாராளுமன்ற வினாக்கள் பின்வருமாறு. அதற்கேற்ப,

அதிமேதகு ஜனாதிபதி அவர்கள் அமைச்சுப் பதவி வகிக்கின்ற அமைச்சுக்களின் விடயப்பரப்பின் கீழ்,

I. பாதுகாப்பு அமைச்சுக்கு ஏற்புடைய வினாக்கள் - 19

II. அரச பாதுகாப்பு மற்றும் அனர்த்த முகாமைத்துவ இராஜாங்க அமைச்சுக்கு ஏற்புடைய வினாக்கள் - 16

III. உள்நாட்டலுவல்கள் இராஜாங்க அமைச்சுக்கு ஏற்புடைய வினாக்கள் - 03

கௌரவ பிரதம அமைச்சர் அமைச்சுப் பதவி வகிக்கின்ற ஏனைய அமைச்சுக்களின் விடயப்பரப்பின் கீழ்,

I. நிதி அமைச்சுக்கு ஏற்புடைய வினாக்கள் - 92
(கௌரவ பிரதம அமைச்சர் நிதியமைச்சர் பதவியை வகித்த காலப்பகுதியினுள்)

II. புத்தசாசன, சமய மற்றும் கலாசார அலுவல்கள் அமைச்சுக்கு ஏற்புடைய வினாக்கள் - 22

III. நகர அபிவிருத்தி மற்றும் வீடமைப்பு அமைச்சுக்கு ஏற்புடைய வினாக்கள் - 41

IV. பொருளாதாரக் கொள்கைகள் மற்றும் திட்டச் செயற்படுத்துகை அமைச்சுக்கு ஏற்புடைய வினாக்கள் - 07

மேலும், தேசிய முக்கியத்துவம் வாய்ந்த கொள்கை ரீதியான விடயங்கள் தொடர்பாக ஒவ்வொரு மாதமும் பாராளுமன்றக் கூட்டம் இடம்பெறும் முதலாது புதன் கிழமை பிரதம அமைச்சரிடம் கேள்வி கேட்கும் வாய்ப்பின் கீழ் வினவப்படுகின்ற 04 வாய்மூலமான வினாக்களுக்குப் பதில்கள் வழங்கப்படுகின்றன. அதற்கமைய இந்த காலப்பகுதியினுள் 12 வாய்மூலமான வினாக்களுக்குப் பதில்கள் வரைவு செய்யப்பட்டுள்ளன.

05 சபை ஒத்திவைப்புப் பிரேரணைகளுக்கு பதில்கள் வரைவு செய்யப்பட்டுள்ளன.



❖ **பாராளுமன்ற அறிக்கைகளைச் சபையில் சமர்ப்பித்தல்**

ஜனாதிபதி மற்றும் பிரதம அமைச்சர் ஆகியோரின் விடயப்பரப்பின் கீழ் வரும் விடயங்கள் தொடர்பான வருடாந்த அறிக்கைகள், செயற்திறன் அறிக்கைகள் மற்றும் கணக்கறிக்கைகள் என்பவற்றைப் பாராளுமன்றத்தில் முன்வைப்பதற்குத் தேவையான நடவடிக்கைகள் பிரதம அமைச்சர் அலுவலகத்தினால் மேற்கொள்ளப்படுவதுடன், இது வரைக்கும் கீழுள்ள விடயங்களின் கீழ் இருபத்தி ஆறு (26) அறிக்கைகள் பாராளுமன்றத்தில் முன்வைக்கப்பட்டுள்ளன. அந்த அறிக்கைகள் பின்வருமாறு.

- **செயற்திறன் அறிக்கைகள்**

i.	தேசிய பொலிஸ் ஆணைக்குழு	- 2019
ii.	உயர் நீதிமன்றம் (மேல் நீதிமன்ற நீதிபதிகள்)	- 2019
iii.	இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழு	-2016, 2017, 2018
iv.	நிதி ஆணைக்குழு	- 2020
v.	அரசாங்க சேவைகள் ஆணைக்குழு	- 2020
vi.	தேர்தல் ஆணைக்குழு	- 2020

vii. தேசிய பொலிஸ் ஆணைக்குழு - 2020
viii. ஆட்பதிவுத் திணைக்களம் - 2020
ix. எல்லை நிர்ணய ஆணைக்குழு - 2020
x. நிர்வாக அலுவல்கள் தொடர்பான பாராளுமன்ற ஆணையாளர் அலுவலகம - 2020

- **வருடாந்த அறிக்கைகள்**

i. தொலைத்தொடர்பு ஒழுங்குபடுத்தல் ஆணைக்குழு - 2019
ii. கைத்தொழில் தொழிநுட்ப நிறுவனம் - 2016
iii. இலங்கை முதலீட்டு சபை -2018, 2019
iv. இலங்கை கட்டளைகள் நிறுவனம் - 2017
v. ஜனாதிபதி அலுவலகம் - 2020

- **விதந்துரைகள்**

i. நிதி ஆணைக்குழு - 2020
ii. நிதி ஆணைக்குழு - 2021
iii. நிதி ஆணைக்குழு - 2022

- **நிலையியற் கட்டளை 119(4) இன் கீழான அறிக்கைகள்**

i. இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழு
ii. அமைச்சரவை அலுவலகம்
iii. இலஞ்சம் அல்லது ஊழல் பற்றிய சார்த்துதல்களைப் புலனாய்வு செய்வதற்கான ஆணைக்குழு
iv. தேசிய கணக்காய்வு அலுவலகம்
v. நிதி ஆணைக்குழு
vi. உயர் நீதிமன்றம்
vii. நிர்வாக அலுவல்கள் தொடர்பான பாராளுமன்ற ஆணையாளர் அலுவலகம்
viii. தேசிய பொலிஸ் ஆணைக்குழு

2.3 சட்ட அலுவல்கள் பிரிவு

2.3.1. சட்ட அலுவல்கள் பிரிவின் கடமைப்பொறுப்பு

- கௌரவ பிரதம அமைச்சர் அவர்களின் விடயப் பரப்பின் கீழ் வரும் பல்வேறுபட்ட சட்டரீதியான பணிகளுக்கு ஏற்புடைய ஒருங்கிணைப்பினை மேற்கொள்ளுதல்.

- உயர் நீதிமன்றம் மற்றும் மேன்முறையீட்டு நீதிமன்றத்தில் அடிப்படை உரிமை மற்றும் ரீட் வழக்குகள் மற்றும் ஏனைய வழக்குகள் தொடர்பாக கௌரவ பிரதம அமைச்சரை மற்றும்.ஃ அல்லது பிரதம அமைச்சரின் செயலாளரைப் பிரதிவாதியாக்கி தொடரப்பட்டுள்ள வழக்கு அலுவல்கள் தொடர்பாக சட்டமா அதிபர் திணைக்களம் மற்றும் ஏனைய ஏற்புடைய தரப்பினருடன் ஒருங்கிணைப்பினை மேற்கொள்ளுதல்.

- கௌரவ பிரதம அமைச்சர் அவர்கள் அமைச்சுப் பதவி வகிக்கின்ற ஏனைய அமைச்சுக்களுக்கு ஏற்புடைய சட்டரீதியான அலுவல்களை ஒருங்கிணைத்தல்.

- கௌரவ பிரதம அமைச்சர் அவர்கள் பங்குபற்றுகின்ற சட்ட அலுவல்களுக்கு ஏற்புடைய கூட்டங்கள், விசேட சந்திப்புக்கள் போன்றன சம்பந்தமான அலுவல்களை மேற்கொள்ளுதல்.

- கௌரவ பிரதம அமைச்சர் அவர்களினால் சமர்ப்பிக்கப்படுகின்ற அமைச்சரவைப் பத்திரங்கள் சம்பந்தமாக தேவையான சந்தர்ப்பங்களில் மேலதிக நடவடிக்கைகளை மேற்கொள்ளுதல்.

- 2021 ஆம் ஆண்டில் சட்ட அலுவல்கள் பிரிவுக்கு கிடைத்துள்ள வழக்குத் தொடர்தல்கள் மற்றும் சட்ட நடவடிக்கைகளுக்கு ஏற்புடைய அழைப்பாணைகளின் எண்ணிக்கை பின்வருமாறு.

  - உயர்நீதிமன்ற வழக்குக் கோப்புகள் - 17
  - மேன்முறையீட்டு நீதிமன்ற வழக்குக் கோப்புகள் - 04

- சிவில் வழக்குக் கோவையின் 461 ஆவது அத்தியாயத்தின் பிரகாரம் அனுப்பிவைக்கப்பட்ட அறிவித்தல்கள் - 286

- மேலே குறிப்பிடப்பட்ட சகல உயர் நீதிமன்ற மற்றும் மேன்முறையீட்டு நீதிமன்ற வழக்குக் கோப்புகள் சம்பந்தமான பணிகளும் இற்றைப்படுத்தப்பட்டுள்ளதுடன், அந்த வழக்கு அலுவல்கள் சம்பந்தமாக தேவையான பதிலிப் பத்திரங்களை வழங்கி, தேவையான சந்தர்ப்பங்களில் சட்டமா அதிபருக்கு அறிவுறுத்தல்கள் வழங்கப்பட்டுள்ளன.

- உயிர்த்த ஞாயிறு தாக்குதலில் பாதிக்கப்பட்டவர்கள் சிவில் வழக்குக் கோவையின் 461 ஆவது அத்தியாயத்தின் பிரகாரம் அரசுக்கு எதிராக வழக்குத் தொடர்வதற்காக சட்ட மா அதிபருக்கு அனுப்பி வைத்துள்ள கடிதங்கள் சம்பந்தமாக மேற்கொள்ளப்பட்ட விசாரிப்புக்கள் சம்பந்தமாக பதில்கள் வழங்கப்பட்டுள்ளன. இவ்வாறான 286 அறிவித்தல்கள் இது வரைக்கும் கிடைத்துள்ளன.

- பின்வரும் சட்ட வரைவுகளைத் திருத்துதல் மற்றும் சட்ட வரைவுகள் சம்பந்தமாக சட்ட மா அதிபர் திணைக்களம், சட்ட வரைஞர் திணைக்களம் மற்றும் ஏற்புடைய அமைச்சுக்களின் செயலாளர்களுடன் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.
  - இறைச்சிக் கடைக்காரர் சட்டம் மற்றும் விலங்குகள் சட்டத்தைத் திருத்துவதற்கான வரைவு
  - அரச அதிகாரிகள் அரசியல் பழிவாங்கலுக்கு உட்படுவதிலிருந்து பாதுகாப்பதற்கான சட்ட வரைவு
  - தேசிய பொலிஸ் ஆணைக்குழுச் சட்டம்

- சட்டப் பிரிவுக்கு முன்வைக்கப்பட்ட பொது முறைப்பாடுகளை சமர்ப்பிக்கின்ற நபர்களுக்கு அவர்களின் சிக்கல்களைக் கருத்திற்கொண்டு சட்ட ஆலோசனைகளை வழங்குவதற்காக அவர்களை அழைத்து கலந்துரையாடல்களை மேற்கொள்ளுதல் மற்றும் ஏற்புடைய நிறுவனங்களுக்கு குறித்த முறைப்பாடுகளை முன்வைத்து அவை தொடர்பாக கண்டறிந்து நடவடிக்கை மேற்கொள்ளுமாறு அறிவித்தல்.

- சட்டப் பிரிவுக்கு சமர்ப்பிக்கப்பட்ட பல்வேறுபட்ட கோப்புக்களை அவதானித்து அதற்கு ஏற்புடைய குறிப்புக்கள் மற்றும் விதந்துரைகளை ஏற்புடைய பிரிவுகளுக்கு வழங்குதல்.

- பிரதம அமைச்சர் அலுவலகத்தின் உத்தியோகத்தர்களுக்கு நீதிமன்ற முறைமை மற்றும் சட்டக் கோட்பாடுகள் தொடர்பாக விழிப்புணர்வளிப்பதற்கான கருத்தரங்குத் தொடரின் ஆரம்பக் கருத்தரங்கினை நடாத்துதல்.

- ஜனாதிபதி அலுவலகத்தின் ஊவுகு.∴01.∴2021 ஆம் இலக்க சுற்றறிக்கையின் அறிவுறுத்தல்களைப் பிரதம அமைச்சர் அலுவலகத்தில் செயற்படுத்துவது சம்பந்தமாக ஆராய்ந்து அதற்கு ஏற்புடைய அறிக்கைகளை வழங்குவதற்காக பங்களிப்புச் செய்தல் மற்றும் தரவு முகாமைத்துவ அமைப்பாக கோப்பு முகாமைத்துவ அமைப்பினை பிரதம அமைச்சர் அலுவலகத்திற்கு அறிமுகப்படுத்துவதில் மற்றும் அதனைப் பயன்படுத்துவதில் பின்பற்ற வேண்டிய ஒழுங்குவிதிகளை தகவல் தொழிநுட்பப் பிரிவுடன் இணைந்து வரைவு செய்தல்.

❖ **2022 ஆம் ஆண்டில் செயற்படுத்துவதற்கு உத்தேசிக்கப்பட்டுள்ள விசேட இலக்குகள் மற்றும் செயற்பாடுகள்**

- பாடசாலை மாணவர்களுக்கு சட்டம் மற்றும் நீதிமன்ற முறைமை தொடர்பாக விழிப்புணர்வொன்றை வழங்குவதற்காக மாவட்ட மட்டத்தில் கருத்தரங்குத் தொடரொன்றை ஏற்பாடு செய்தல் அல்லது இந்த நிகழ்ச்சியை ஒன்லைன் முறையில் செயற்படுத்தல்.

- அரச அதிகாரிகளுக்கு சட்டம் மற்றும் நீதிமன்ற அலுவல்கள் தொடர்பாக விழிப்புணர்வளிக்கும் நிகழ்ச்சிகளை ஏற்பாடு செய்தல்.

- பொதுமக்களுக்கு சட்டரீதியான தகவல்களை வழங்குவதற்காக சஞ்சிகையொன்றை 04 பகுதிகளாக வெளியிடுதல்.

- தரவு முகாமைத்துவ அமைப்பாக கோப்பு முகாமைத்துவ அமைப்பினை பிரதம அமைச்சர் அலுவலகத்திற்கு அறிமுகப்படுத்துவதில் மற்றும் அதனைப் பயன்படுத்துவதில் பின்பற்ற வேண்டிய ஒழுங்குவிதிகள் உள்ளடங்கிய உள்ளக சுற்றறிக்கை மற்றும் தாபன விதிக் கோவையில் குறிப்பிடப்பட்டுள்ள

ஏற்பாடுகளுக்கு மேலதிகமாக கோப்பு முகாமைத்துவ அமைப்பினைப் பயன்படுத்துகின்ற அதில் உள்ளடங்கியுள்ள தரவுகளின் இரகசியத்தன்மையைப் பாதுகாக்கும் ஒப்பந்தமொன்றை மேற்கொள்வது சம்பந்தமாக சட்ட உதவியை வழங்குதல் மற்றும் பிரதம அமைச்சர் அலுவலகத்தின் பணியாட்தொகுதியைச் சேர்ந்த சகல அலுவலர்களுக்கும் தகவல் தொழிநுட்பக் கொள்கைகளை சட்டப் பிரிவு மற்றும் தகவல் தொழிநுட்பப் பிரிவுடன் இணைந்து வரைவு செய்தல்.

- நிர்வாக.˙. மனித வளங்கள் மற்றும் உற்பத்தித்திறன் பிரிவின் மற்றும் சட்டப் பிரிவின் ஒருங்கிணைப்புடன் தகவல் தொழிநுட்ப முகவராண்மை நிறுவனத்தின் ஐஊவுயு மற்றும் இலங்கை கணனி அவசர தயார் நிலை அணியின் (ளுடுஊநுசுவு) வளப் பங்களிப்பின் கீழ் இலத்திரனியல் கொடுக்கல்வாங்கல் சட்டத்தின் ஏற்பாடுகள் சம்பந்தமாகவும், இலத்திரனியல் கையொப்பமிடுதல் சம்பந்தமாகவும் விழிப்புணர்வளிக்கும் நிகழ்ச்சிகளை பல கட்டங்களாக நடாத்துதல்.

2.4 பொதுசனத் தொடர்புகள் பிரிவு

2.4.1 பொதுசனத் தொடர்புகள் அலகு

பிரதம அமைச்சருக்கு சமர்ப்பிக்கப்படும் பொது மக்களின் சிக்கல்கள்.ஃ குறைகளை மிகவும் வினைத்திறனுடன் மற்றும் பயன்மிக்க வகையில் முகாமைத்துவப்படுத்தும் அடிப்படை நோக்கத்தை முன்னிறுத்தி பிரதம அமைச்சர் அலுவலகத்தின் பொதுசன முறைப்பாடுகள் பிரிவு தாபிக்கப்பட்டுள்ளது.

நாட்டின் அனைத்து அரச நிறுவனங்கள் தொடர்பாகவும் சமர்ப்பிக்கப்படும் பொது மக்கள் முறைப்பாடுகள் மற்றும் சேவைகளுக்கான கோரிக்கைகளை துரிதமாக நிறைவேற்றுவதற்குத் தேவையான ஒருங்கிணைப்பு நடவடிக்கைகளை மேற்கொள்வதும் இந்தப் பிரிவின் அலுவலாகும். அத்துடன் பொது மக்களின் கோரிக்கைகள், தேவைகளை உரிய நிறுவனங்களின் ஊடாக நிறைவேற்றிக்கொள்ளல் சம்பந்தமான முன்னேற்றத்தை நிதமும் வினவி, குறிப்பிட்ட பொது மக்கள் தேவைகளை நிறைவேற்றல் சம்பந்தமான பின்னூட்டல் நடவடிக்கையும் மேற்கொள்ளப்படுகின்றது.

மேலும், 1965 அழைப்பு நிலையத்திற்கு முன்வைக்கப்படுகின்ற பொதுமக்கள் முறைப்பாடுகள் மற்றும் கோரிக்கைகள் சம்பந்தமாக உடனடியாகப் பதிலளித்து, அவற்றைத் துரிதமாக நிறைவேற்றுவதற்குத் தேவையான ஒருங்கிணைப்பு அலுவல்களும் மேற்கொள்ளப்படுகின்றன.


2021 ஜனவரி 01 ஆந் திகதி முதல் 2021 டிசம்பர் 31 ஆந் திகதி வரை கிடைக்கப்பெற்ற பொதுமக்கள் கோரிக்கைகள்

#	முன்வைக்கப்பட்ட பொதுமக்கள் கோரிக்கைகள்	எண்ணிக்கை
1.	கடிதம் மூலம் கிடைக்கப்பெற்ற கோரிக்கைகள்	34இ014
2.	தொலைபேசி அழைப்புக்கள் • பொதுசனத் தொடர்புகள் பிரிவுக்கு மற்றும் பதவிநிலை அதிகாரிகளின் தனிப்பட்ட தொலைபேசிக்கு கிடைத்த அழைப்புக்களின் எண்ணிக்கை (ஏறத்தாழ) • 1965அழைப்பு நிலையத்திற்கு கிடைத்த அழைப்புக்கள்	62இ904 7இ644

சூ	முன்வைக்கப்பட்ட பொதுமக்கள் கோரிக்கைகள்	எண்ணிக்கை
3.	சேவைபெறுநர்களை நேரடியாக சந்தித்தல்	5,621
4.	மின்னஞ்சல் மூலம் கிடைக்கப்பெற்ற கோரிக்கைகள்	1,935
5.	பெக்ஸ் மூலம் கிடைக்கப்பெற்ற கோரிக்கைகள்	1,034

2021 ஜனவரி 01 ஆந் திகதி முதல் 2021 டிசம்பர் 31 ஆந் திகதி வரை பொதுமக்கள் கோரிக்கைகள், முறைப்பாடுகள் கிடைத்த முறை

.



❖ பொதுசனத் தொடர்புகள் பிரிவின் கடமைகளை மிகவும் உற்பத்தித்திறன்மிக்கதாகவும், வினைத்திறன்மிக்கதாகவும் நிறைவேற்றுவதற்கு மேற்கொள்ளப்பட்ட நடவடிக்கைகள்

1. தரவு முகாமைத்துவ அமைப்பு ஊடாக பொதுசனத் தொடர்புகள் பிரிவுக்கு கிடைக்கின்ற கோரிக்கைகளை மிகவும் வினைத்திறன்மிக்கதாகவும், துரிதமாகவும் ஏற்புடைய பிரிவுகளுக்கு அனுப்புதல் மற்றும் அந்தப் பணி உரியவாறு முகாமைத்துவம் செய்யப்பட்டு, கண்காணிக்கப்படுவதுடன், ஏற்புடைய தரவுகளைப் பகுப்பாய்வு செய்து அறிக்கைகள் தயாரிக்கப்படுகின்றன. அதன் மூலம் வெளிப்படைத்தன்மை மற்றும் அதிகாரிகளின் பொறுப்புக் கூறலை உறுதிப்படுத்த முடிதல்.

2. வீடு மற்றும் காணிக் கோரிக்கைகள் சம்பந்தமாக புதிய மாதரிப் படிவங்களை அறிமுகப்படுத்தி, அந்த விண்ணப்பதாரிகளில் உண்மையான தேவை உள்ள மற்றும் முன்னுரிமை வழங்க வேண்டிய நபர்களை கிராம உத்தியோகத்தரின் விதந்துரை மற்றும் பிரதேச செயலாளரின் சான்றுப்படுத்தலின் அடிப்படையில் தெரிவு செய்ய நடவடிக்கை மேற்கொள்ளுதல்.

3. பொதுசனத் தொடர்பாடல் பிரிவின் கட்டிடத்தை மீள்கட்டமைப்பதன் மூலம் பொதுமக்களுக்கு மிகவும் வினைத்திறன்மிக்க, நட்புறவான சேவைகளை வழங்க நடவடிக்கை மேற்கொள்ளுதல்.

4. பொதுமக்களின் முறைப்பாடுகள் மற்றும் மனக்குறைகளை முன்வைப்பதற்காக 1965 எனும் அவசர அழைப்பு இலக்கத்தை அறிமுகப்படுத்தியமை மூலம் பொதுமக்களின் மனக்குறைகளுக்குத் துரிதமாகப் பதிலளிப்பதற்கு மற்றும் தீர்வு வழங்குவதற்குத் தேயான தலையீட்டினைச் செய்ய முடிதல்.

5. கௌரவ பிரதம அமைச்சருக்கு முன்வைக்கப்படுகின்ற பொதுமக்கள் மனக்குறைகள் மற்றும் முறைப்பாடுகள் பொதுசனத் தொடர்புகள் பிரிவுக்கு கிடைக்கும்போது அது கிடைக்கப்பெற்றதாக குறுஞ்செய்தியொன்று மூலம் மனக்குறை அல்லது முறைப்பாட்டை முன்வைத்த நபருக்குத் தொடர்பாடல் செய்தல்.

2.4.2 சமய அலுவல்கள் பிரிவு

கௌரவ பிரதம அமைச்சர் அவர்களின் தலைமையில் தேசிய மட்டத்தில் ஏற்பாடு செய்யப்படுகின்ற சமய நிகழ்ச்சிகள் மற்றும் சமய வைபவங்கள் தொடர்பாகவும், சமய அலுவல்கள் சம்பந்தமாக கௌரவ பிரதம அமைச்சர் அவர்களுக்கு அனுப்பிவைக்கப்பட்ட கோரிக்கைகள் தொடர்பாகவும், சமய விடயம் சம்பந்தமாக கௌரவ பிரதம அமைச்சர் அவர்களினால் வழங்கப்படுகின்ற வாழ்த்துச் செய்திகள் மற்றும் அனுதாபச் செய்திகள் தொடர்பாகவும் உள்ள அலுவல்கள் பிரதம அமைச்சர் அலுவலகத்தின் சமய அலுவல்கள் பிரிவினால் மேற்கொள்ளப்படுகின்றன.

❖ "அமாதம் சிஸிலஸ" போயா தின தர்மப் பிரசங்க நிகழ்ச்சி

கௌரவ பிரதம அமைச்சர் அவர்களின் எண்ணக்கருவுக்கு ஏற்ப, அறிவுஞானம் மிகுந்த சிறந்த சமூகமொன்றை உருவாக்குவதற்காக புத்த மதத்தின் போதனைகளைப் பகிர்ந்துகொள்ளும் நோக்கத்தை முன்னிறுத்தி "அமாதம் சிஸிலஸ" தர்மப் பிரசங்க புண்ணிய நிகழ்வு நடாத்தப்படுகிறது.

2021 ஜனவரி 01 ஆந் திகதி முதல் 2021 டிசம்பர் 31 ஆந் திகதி வரை நடாத்தப்பட்ட தர்மப் பிரசங்க நிகழ்ச்சிகள் பின்வருமாறு.

தர்மப் பிரசங்க நிகழ்ச்சி மற்றும் திகதி	தர்மப் பிரசங்கம் நடாத்திய தேரர் அவர்கள்	விபரம்
206 ஆவது தர்மப் பிரசங்கம் ஜனவரி 28 ஆந் திகதி துருது போயா தினம்	கொழும்பு, மாளிகாகந்தை வித்யோதய பிரிவெனாவின் விரிவுரையாளர் சங்கைக்குரிய கெஹெல்வல நந்த தேரர் அவர்கள்	கொரோனா தொற்று நிலைமை காரணமாக சுகாதார விதந்துரைகளுக்கு ஏற்ப, வரையறுத்த எண்ணிக்கையான பக்தர்களின் பங்கேற்புடன் விஜேராமை மாவத்தையிலுள்ள பிரதம அமைச்சர் அவர்களின் உத்தியோகபூர்வ இல்லத்தில் நடாத்தப்பட்டது.

தர்மப் பிரசங்க நிகழ்ச்சி மற்றும் **திகதி**	**தர்மப் பிரசங்கம் நடாத்திய தேரர் அவர்கள்**	**விபரம்**
207 ஆவது தர்மப் பிரசங்கம் பெப்ரவரி 26 நவம் போயா தினம்	வடமேல் மாகாணத்தின் சங்கநாயக்க, வாரியபொல ரஜமகா விகாரையின் விகாராதிபதி மற்றும் வாரியபொல ஸ்ரீ சுமங்கள பிரிவெனாவின் பணிப்பாளர், பேராசிரியர் சங்கைக்குரிய தும்புள்ளே ஸ்ரீ சீலக்கந்த தேரர் அவர்கள்	சுகாதார வழிகாட்டல்களுக்கு ஏற்ப, வரையறுத்த எண்ணிக்கையான பக்தர்களின் பங்கேற்புடன் அலரி மாளிகையில் நடாத்தப்பட்டது.
208 ஆவது தர்மப் பிரசங்கம் மார்ச் 28 ஆந் திகதி மெதின் போயா தினம்	மீதிரிகல நிஸ்ஸரன வன ஆரண்ய சேனாசனாதிபதி, பிரதான கம்மட்டனாசார்ய சங்கைக்குரிய உட ஈரியகம தம்மஜீவ தேரர் அவர்கள்	சுகாதார வழிகாட்டல்களுக்கு ஏற்ப, வரையறுத்த எண்ணிக்கையான பக்தர்களின் பங்கேற்புடன் அலரி மாளிகை வளாகத்திலுள்ள போதி மரம் அருகே நடாத்தப்பட்டது.
209 ஆவது தர்மப் பிரசங்கம் ஏப்ரல் 26 ஆந் திகதி பக் முழுநோன்மதி போயா தினம்	இலங்கை களனி பல்கலைக்கழகத்துடன் இணைந்த பாலி மற்றும் பௌத்த பல்கலைக்கழகத்தின் சிரேஷ்ட பேராசிரியர் சங்கைக்குரிய மெதவச்சியே தம்மஜோதி தேரர் அவர்கள்	சுகாதார வழிகாட்டல்களுக்கு ஏற்ப, வரையறுத்த எண்ணிக்கையான பக்தர்களின் பங்கேற்புடன் அலரி மாளிகையில் நடாத்தப்பட்டது.

தர்மப் பிரசங்க நிகழ்ச்சி மற்றும் **திகதி**	**தர்மப் பிரசங்கம் நடாத்திய தேரர் அவர்கள்**	**விபரம்**
210 ஆவது தர்மப் பிரசங்கம் மே மாதம் 26 ஆந் திகதி வெசாக் போயா தினம்	அமரபுர சிறி சுமன விகாரை தரப்பின் மகாநாயக்க, பன்னிபிட்டிய ஸ்ரீ தெவ்ரம் விகாராதிபதி கலாநிதி கொலன்னாவே சிறி சுமங்கள தேரர் அவர்கள்	வரையறுத்த எண்ணிக்கையான பக்தர்களின் பங்கேற்புடன் அலரி மாளிகையில் நடாத்தப்பட்டது.
211 ஆவது தர்மப் பிரசங்கம் ஜூன் மாதம் 24 ஆந் திகதி பொசொன் போயா தினம்	உடுகம்பொல, தொம்பவெல ஸ்ரீ சத்தர்மகுப்த பிரிவென் மூல மகா விகாராதிகாரி, பிரதிக் கல்விப் பணிப்பாளர், தத்துவவியலாளர், ராஜகீய பண்டித சங்கைக்குரிய கொப்பேவல மேதங்கர தேரர் அவர்கள்	வரையறுத்த எண்ணிக்கையான பக்தர்களின் பங்கேற்புடன் அலரி மாளிகையில் நடாத்தப்பட்டது.
212 ஆவது தர்மப் பிரசங்கம் ஜூலை மாதம் 23 ஆந் திகதி எசல போயா தினம்	அனுராதபுரம், ஸ்ரீ சம்புத்த ஜயந்தி விகாரையின் விகாராதிபதி, அகில இலங்கை சாசனப் பாதுகாப்பு சபையின் உப தலைவர், அனுராதபுர மாவட்ட சாசனப் பாதுகாப்பு சபையின் கௌரவத் தலைவர், வடக்கு மற்றும் வடமத்திய மாகாணங்களின் பிரதான சங்கநாயக்க, பண்டித, சங்கைக்குரிய நுகேதென்னே பஞ்ஞானந்த தேரர் அவர்கள்	சுகாதாரப் பிரிவினரால் வழங்கப்பட்ட விதந்துரைகளுக்கு ஏற்ப, வரையறுத்த எண்ணிக்கையான பக்தர்களின் பங்கேற்புடன் நுவரெலியாவிலுள்ள பிரதம அமைச்சர் அவர்களின் உத்தியோகபூர்வ இல்லத்தில் நடாத்தப்பட்டது.
213 ஆவது தர்மப் பிரசங்கம் ஆகஸ்ட் மாதம் 22 ஆந் திகதி நிகினி போயா தினம்	இலங்கை ‘‘வேஜின் நிக்காயவின் பிரதிப் பதிவாளர், பொகுனுவிட, ஸ்ரீ வினயாலங்காராமவாசி கலாநிதி சங்கைக்குரிய குகுல்பனே சுதஸ்ஸி தேரர் அவர்கள்	சுகாதார வழிகாட்டல்களுக்கு ஏற்ப, மிகவும் வரையறுத்த எண்ணிக்கையான பக்தர்களின் பங்கேற்புடன் அலரி மாளிகையில் நடாத்தப்பட்டது.

தர்மப் பிரசங்க நிகழ்ச்சி மற்றும் **திகதி**	**தர்மப் பிரசங்கம் நடாத்திய தேரர் அவர்கள்**	**விபரம்**
214 ஆவது தர்மப் பிரசங்கம் செப்டம்பர் 20 ஆந் திகதி பினர போயா தினம்	மினுவாங்கொடை, பத்தன்டுவன பிக்குமார் பயிற்சி நிலையத்தின் தலைவர், இலங்கை ராமக்ஞ மகா நிக்காயவின் அநுநாயக்க, சங்கைக்குரிய நெதகமுவே விஜய மைத்திரீ தேரர் அவர்கள்	சுகாதார வழிகாட்டல்களுக்கு ஏற்ப, வரையறுத்த எண்ணிக்கையான பக்தர்களின் பங்கேற்புடன் அலரி மாளிகையில் நடாத்தப்பட்டது.
215 ஆவது தர்மப் பிரசங்கம் ஒக்டோபர் மாதம் 20 ஆந் திகதி வப் முழுநோன்மதி போயா தினம்	இலங்கை பௌத்த மற்றும் பாலி பல்கலைக்கழகத்தின் முன்னாள் மகோபாத்ய மற்றும் சிரேஷ்ட பேராசிரியர், கொழும்பு கோட்டை ஸ்ரீ சம்புத்தாலோக விகாரை மற்றும் இத்ததெமலிய புராண விகாரை உபய விகாராதிபதிஇ தக்ஷின லங்கா உப பிரதான சங்கநாயக்க, பேராசிரியர் சங்கைக்குரிய இத்ததெமலியே சத்தர்ம கீர்த்தி ஸ்ரீ சந்தஜோதி இந்தஸர தேரர் அவர்கள்	வரையறுத்த எண்ணிக்கையான பக்தர்களின் பங்கேற்புடன் அலரி மாளிகையில் நடாத்தப்பட்டது.
216 ஆவது தர்மப் பிரசங்கம் நவம்பர் மாதம் 24 ஆந் திகதி இல் முழுநோன்மதி போயா தினம்	வாத்துவ தல்பிடிய போதிராஜ மகா விகாராதிபதி கோட்டை ஸ்ரீ கல்யாணி சாமாக்ர தர்ம மகா சங்க சபையின் சங்கைக்குரிய அநுநாயக்க மற்றும் பிரதான பதிவாளர் துரந்தர அக்கமகா பண்டித, பேராசிரியர் சங்கைக்குரிய கொடபிடியே ராஹுல அநுநாயக்க தேரர் அவர்கள்	150 பக்தர்களின் பங்கேற்புடன் அலரி மாளிகையில் நடாத்தப்பட்டது.

தர்மப் பிரசங்க நிகழ்ச்சி மற்றும் **திகதி**	**தர்மப் பிரசங்கம் நடாத்திய தேரர் அவர்கள்**	**விபரம்**
217 ஆவது தர்மப் பிரசங்கம் டிசம்பர் 18 ஆந் திகதி உந்துவப் முழுநோன்மதி போயா தினம்	வரலாற்றுச் சிறப்புமிக்க வாரியபொல, கொலம்பகம ஸ்ரீ மியுகுணாராமை ரஜமகா விகாராதிகாரி நேபாளத்திலுள்ள லும்பினி நகர லங்கா மகா விகாரையின் பொறுப்பு விகாராதிபதி சமூக அபிவிருத்தி தொடர்பான விருது பெற்ற கலாநிதி, விசித்ரபாணி சங்கைக்குரிய கல்லெஹெபிடியே பேமரதன தேரர் அவர்கள் (கொலம்பகம பொடி ஹாமுதுருவோ)	வரையறுத்த எண்ணிக்கையான பக்தர்களின் பங்கேற்புடன் பிரதம அமைச்சரின் உத்தியோகபூர்வ இல்லத்தில் நடாத்தப்பட்டது.





❖ **சமய அலுவல்கள் சம்பந்தமாக கௌரவ பிரதம அமைச்சர் அவர்களுக்கு அனுப்பி வைக்கப்பட்ட கோரிக்கைகள் தொடர்பான அலுவல்கள்**

சமய அலுவல்கள் சம்பந்தமாக சங்கைக்குரிய தேரர்களினாலும், பல்வேறுபட்ட ஏனைய தரப்பினராலும் கௌரவ பிரதம அமைச்சர் அவர்களுக்கு, பிரதம அமைச்சரின் பணியாட்தொகுதி தலைமை அதிகாரி அலுவலகத்திற்கு மற்றும் ஏனைய பிரிவுகளுக்கு நாளாந்தம் அனுப்பி வைக்கப்படும் கோரிக்கைகள் சம்பந்தமாக ஏற்புடைய நிறுவனங்களுடன்.். தரப்பினருடன் ஒருங்கிணைப்புச் செய்தல் மற்றும் அதற்கு ஏற்புடைய தொடராய்வு அலுவல்கள் மேற்கொள்ளப்படுகின்றன. அதற்கேற்ப, இந்த வருடத்தின் ஆரம்பம் முதல் நான்காவது காலாண்டு வரை இந்தப் பிரிவுக்கு கிடைத்த 808 கடிதங்கள் சம்பந்தமாக தேவையான ஒருங்கிணைப்பு நடவடிக்கைகளை மேற்கொண்டு, கடிதங்கள் அனுப்பி வைக்கப்பட்ட தரப்பினரை அறிவுறுத்துவதற்கு நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டது

❖ **பிரதான சமய நிகழ்வுகளை ஏற்பாடு செய்வது தொடர்பாக கௌரவ பிரதம அமைச்சர் அவர்களின் தலைமையில் நடாத்தப்பட்ட கலந்துரையாடல்கள்**

- கொழும்பு, கங்காராமையின் 42 ஆவது நவம் மகா பெரஹராவை சுகாதார வழிகாட்டல்களுக்கு ஏற்ப, பொதுமக்களின் பங்கேற்பின்றி, பெரஹரா சம்பிரதாயங்களுக்கு முன்னுரிமை வழங்கி நடாத்துவதற்காக கௌரவ பிரதம அமைச்சரின் அறிவுறுத்தலின்படி 2021 பெப்ரவரி 08 ஆந் திகதி ஆரம்பக் கலந்துரையாடலொன்று கங்காராமை விகாரையில் நடாத்தப்பட்டது.

  ஒவ்வொரு நிறுவனங்களுக்கும் ஒப்படைக்கப்பட்ட பணிகளை அந்த நிறுவனங்கள் மூலம் நிறைவேற்றிக் கொள்வதற்குத் தேவையான ஒருங்கிணைப்பு அலுவல்களைச் செய்வதன் மூலம் 2021 பெப்ரவரி 26 ஆந் திகதி கொழும்பு நவம் மகா பெரஹரா வீதி வலம் வருவதற்கும் தேவையான வசதிகள் ஏற்படுத்திக் கொடுக்கப்பட்டன.

- 2021 ஆம் ஆண்டில் கங்காராமை விகாரை "புத்தர்'மி வெசாக் வலயத்தை", நிலவிய கொரோனா தொற்று நிலைமை காரணமாக பொதுமக்களின் பங்கேற்பின்றி "டிஜிட்டல் வெசாக் வலயமாக" நடாத்துவது தொடர்பான கலந்துரையாடலொன்று பிரதம அமைச்சரின் மேலதிக செயலாளரின் தலைமையில் கங்காராமை விகாரையில் நடாத்தப்பட்டது.

அதில், அந்த விகாரையின் விகாராதிகாரி, கலாநிதி சங்கைக்குரிய கிரிந்தே அஸ்ஸஜீ தேரர் அவர்களின் ஆலோசனைப்படி பாதுகாப்பு மற்றும் ஏனைய நிறுவனங்களின் ஒத்துழைப்புடன் டிஜிட்டல் வெசாக் வலயத்தினை நிர்மாணிப்பதற்கு எதிர்பார்க்கப்படும் கடமைப்பொறுப்பினை அந்த நிறுவனங்களை ஒருங்கிணைப்பதன் மூலம் நிறைவேற்றுவதற்குத் தேவையான வசதிகள் ஏற்படுத்திக் கொடுக்கப்பட்டன.

கௌரவ பிரதம அமைச்சர் மற்றும் அவரின் பாரியாரின் பங்கேற்புடன் வெசாக் வலயத்தின் ஆரம்ப அலுவல்கள் 2021 மே மாதம் 26 ஆந் திகதி கங்காராமை விகாரையை மையப்படுத்தி சுகாதார வழிகாட்டல்களுக்கு ஏற்ப நடாத்தப்பட்டதுடன், 2021 மே மாதம் 26 ஆந் திகதி முதல் 28 ஆந் திகதி வரை இடம்பெற்ற "புத்தர்'மி வெசாக் வலயத்தினை" இலத்திரனியல் ஊடகங்கள் மூலம் பொதுமக்கள் பார்வையிடுவதற்கு சந்தர்ப்பம் வழங்கப்பட்டது.

- 2021 ஆம் ஆண்டின் தேசிய பொசொன் நினைவுதின அரச நிகழ்வினை வரலாற்றுச் சிறப்புமிக்க சிதுல்பவ்வ விகாரை மற்றும் வரலாற்றுச் சிறப்புமிக்க மிகிந்தலை புனித பூமியை மையப்படுத்தி, சுகாதார வழிகாட்டல்களுக்கு ஏற்ப நடாத்துவதற்கு ஏற்புடைய ஆரம்பக் கலந்துரையாடல் கௌரவ பிரதம அமைச்சரின் தலைமையில் மற்றும் வரலாற்றுச் சிறப்புமிக்க சிதுல்பவ்வ விகாரையின் விகாராதிபதி, சங்கைக்குரிய மெடரம்ப ஹேரதன தேரர் அவர்கள், மிகிந்தலை ரஜ மகாவிகாரையின் விகாராதிபதி, சங்கைக்குரிய வலவாஹெங்குணவெவே தம்மரதன தேரர் அவர்கள் உட்பட மகா சங்கத்தினரின் பங்கேற்புடன் 2021 ஜூலை 17 ஆந் திகதி அலரி மாளிகையில் நடாத்தப்பட்டது.

  2021 ஜூன் 24 ஆந் திகதி முழுநோன்மதி போயா தினத்தன்று வரலாற்றுச் சிறப்புமிக்க சிதுல்பவ்வ விகாரை மற்றும் வரலாற்றுச் சிறப்புமிக்க மிகிந்தலை புனித பூமியை மையப்படுத்தி நினைவு சமய அலுவல்கள் குறைந்தளவான மக்கள் பங்கேற்புடன் சுகாதார விதந்துரைகளுக்கு ஏற்ப நடாத்தப்பட்டது. அந்த சமய நிகழ்ச்சிகளை இலத்திரனியல் ஊடகங்கள் மூலம் சகல பக்தர்களும் வீட்டிலிருந்து நேரடியாகப் பார்வையிடும் வகையில் தேவையான வசதிகள் ஏற்பாடு செய்யப்பட்டன.

❖ சமய விடயம் சம்பந்தமாக கௌரவ பிரதம அமைச்சர் அவர்களினால் அனுப்பிவைக்கப்பட்ட ஆசிச் செய்திகள் மற்றும் அனுதாபச் செய்திகள்

விகாரைகளினால் இலங்கையிலும் வெளிநாட்டிலும் நடாத்தப்படுகின்ற பல்வேறுபட்ட வைபவங்களை மையப்படுத்தி நினைவிதழ்கள் வெளியிடப்படும் சந்தர்ப்பங்களில், அதற்கு கௌரவ பிரதம அமைச்சரின் ஆசிச் செய்தியொன்றை வழங்குமாறு மேற்கொள்ளப்படும் கோரிக்கைகள் சம்பந்தமாக ஆசிச் செய்திகள் வழங்கப்படும். அத்துடன் சங்கைக்குரிய தேரர்கள் தொடர்பான நாயக்க பதவி அக்தபத்திரங்கள் வழங்குதல், விகாரைகளின் ஆண்டுப் பூர்த்தி நிகழ்வுகள் போன்ற விசேட சந்தர்ப்பங்களை மையப்படுத்தி கௌரவ பிரதம அமைச்சருக்கு முன்வைக்கப்படும் கோரிக்கைகளுக்கு ஏற்ப ஆசிச் செய்திகள் வழங்கப்படுகின்றன.

அதற்கேற்ப 2021.01.01 ஆந் திகதி முதல் 2021.12.31 ஆந் திகதி வரை சமய விடயத்திற்கு ஏற்புடையவாறு 23 ஆசிச் செய்திகள் வழங்கப்பட்டுள்ளன.

இலங்கையிலும், வெளிநாடுகளிலும் வசிக்கின்ற சங்கைக்குரிய மகாநாயக்க, அநுநாயக்க தேரர்கள், விகாராதிபதிகள் மற்றும் ஏனைய தேரர்களின் மறைவின்போது அதற்கு கௌரவ பிரதம அமைச்சரின் அனுதாபத்தைத் தெரிவிப்பதற்காக அவரின் கையொப்பத்துடன் அனுதாபச் செய்திகள் வழங்கப்படுகின்றன. 2021.01.01 ஆந் திகதி முதல் 2021.12.31 ஆந் திகதி வரை சமய விடயத்திற்கு ஏற்புடையவாறு 91 அனுதாபச் செய்திகள் வழங்கப்பட்டுள்ளன.

அத்துடன், மூன்று நிக்காயாக்களையும் சேர்ந்த மகாநாயக்க, அநுநாயக்க தேரர்கள், நிக்காய தரப்பு பதிவாளர் தேரர்கள் உட்பட அகில இலங்கை, மாவட்ட மற்றும் பிரதேச சாசனப் பாதுகாப்பு சபைகளில் பிரதான பதவிகளை வகிக்கும் தேரர்கள், தேசிய மற்றும் சாசனப் பணியில் ஈடுபட்டுள்ள தேரர்கள் மற்றும் ஏனைய சமயத் தலைவர்களின் பிறந்த தினத்தை முன்னிட்டு 598 வாழ்த்துச் செய்திகளை கௌரவ பிரதம அமைச்சரினால் வழங்குவதற்கு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

❖ **விசேட சமய நிகழ்ச்சிகளை ஏற்பாடு செய்தல் மற்றும் வசதிகளை ஏற்படுத்திக் கொடுத்தல்**

நிலவிய கொரோனா தொற்று நிலைமை காரணமாக இந்து, கிறிஸ்தவ, இஸ்லாமிய விசேட சமய நிகழ்வுகளைச் சடங்குமுறைப்படி நடாத்துவதற்கு கௌரவ பிரதம அமைச்சர் அவர்கள் வழங்கிய அறிவுறுத்தலுக்கு ஏற்ப, அந்த சமய அலுவல்கள்.ஃ வைபவங்களை ஏற்பாடு செய்வதற்கான ஒருங்கிணைப்பு உதவி வழங்கப்பட்டது.

சுகாதார விதந்துரைகளுக்கு ஏற்ப பின்வரும் நிகழ்ச்சிகளை வரையறுத்த எண்ணிக்கையானோரின் பங்கேற்புடன் நடாத்துவதற்குத் தேவையான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டன.

- புதிய கொரோனா வைரஸ் நிலைமை இலங்கையிலிருந்தும் முழு உலகிலிருந்தும் நீங்கிச் செல்லட்டும் எனப் பிரார்த்தித்து அனுராதபுரம், வரலாற்றுச் சிறப்புமிக்க மிரிசவெடிய சைத்தியத்திற்கு அருகே பிரித் ஓதும் ஆசிர்வாத சமய நிகழ்வு 2021 செப்டம்பர் 07 ஆந் திகதி முதல் 13 ஆந் திகதி வரை ஏழு நாட்கள் அந்த புனித பூமியை மையப்படுத்தி நடாத்தப்பட்டது.

  வரலாற்றுச் சிறப்புமிக்க மிரிசவெடிய ரஜமகா விகாரையின் விகாராதிபதி, சங்கைக்குரிய ஈதல வெடுனுவெவே ஞானதிலக தேரர் அவர்களின் ஆலோசனைப்படி, இளைஞர் மற்றும் விளையாட்டுத்துறை அமைச்சர்.ஃ அபிவிருத்தி ஒருங்கிணைப்பு மற்றும் கண்காணிப்பு அமைச்சர் கௌரவ நாமல் ராஜபக்‘ அவர்களின் தலைமையில் 2021.09.01 ஆந் திகதி அலரி மாளிகையில் இடம்பெற்ற கலந்துரையாடலில் தீர்மானிக்கப்பட்டவாறு அந்த புண்ணிய நிகழ்வினை நடாத்துவதற்குத் தேவையான வசதிகளை வழங்குவதற்கு ஏற்புடைய நிறுவனங்களுடன் ஒருங்கிணைப்பு அலுவல்கள் மேற்கொள்ளப்பட்டன.





- முஹம்மத் நபியவர்களின் பிறந்த தினத்தை முன்னிட்டு மீலாதுன் நபி ஞாபகார்த்த நிகழ்வு 2021 ஒக்டோபர் 19 ஆந் திகதி கௌரவ பிரதம அமைச்சரின் தலைமையில், வரையறுத்த எண்ணிக்கையான அதிதிகளின் பங்கேற்புடன் அலரி மாளிகையில் நடாத்தப்பட்டது. அந்த நிகழ்வுடன் இணைந்த வகையில் நினைவு முத்திரையொன்றும் வெளியிடப்பட்டது.

- இந்தப் பணிகள் புத்தசாசன, சமய மற்றும் கலாசார அலுவல்கள் அமைச்சின் முஸ்லிம் சமய அலுவல்கள் திணைக்களத்துடன் இணைந்து நடாத்தப்பட்டதுடன், அது சம்பந்தமான சகல ஒருங்கிணைப்பு அலுவல்கள் மற்றும் தேவையான வசதிகள் சமய அலுவல்கள் பிரிவினால் மேற்கொள்ளப்பட்டன.

- இந்தியாவின் குஷிநகர் சர்வதேச விமான நிலையத்தினைத் திறந்து வைக்கும் நிகழ்வினை முன்னிறுத்தி முதலாவது சர்வதேச விமானப் பயணத்திற்கு இலங்கை தூதுக் குழுவொன்றைப் பங்கேற்கச் செய்யுமாறு இந்திய அரசாங்கம் விடுத்த கோரிக்கைக்கு ஏற்ப, கௌரவ பிரதம அமைச்சரின் அறிவுறுத்தலின்படி, அது தொடர்பாக சகல நிறுவனங்களினதும் பங்கேற்படன் கலந்துரையாடலொன்று பிரதம அமைச்சரின் செயலாளரின் தலைமையில் அலரி மாளிகையில் நடாத்தப்பட்டது.

  அதற்கேற்ப, சங்கைக்குரிய நூறு மகாசங்கத்தினர் உள்ளடங்கிய விசேட தூதுக் குழு 2021 ஒக்டோபர் 20 மற்றும் 21 ஆந் திகதிகளில் இந்த விமானப் பயணத்தில் கலந்துகொண்டனர்.

  இந்த நிகழ்வுக்கு புத்தசாசன, சமய மற்றும் கலாசார அலுவல்கள் அமைச்சின் ஒருங்கிணைப்பு உதவியுடன், ஏற்புடைய சகல நிறுவனங்களையும் ஒருங்கிணைத்து தேவையான வசதிகள் ஏற்படுத்திக் கொடுக்கப்பட்டன.

- கொழும்பு 10, ஸ்ரீ வஜிராஷ்ரம பௌத்த மத்திய நிலையத்தின் கடின சீவர (காவியுடை) புண்ணிய நிகழ்வு, கௌரவ பிரதம அமைச்சரின் பங்களிப்புடன் 2021 நவம்பர் மாதம் 13 மற்றும் 14 ஆந் திகதிகளில் அந்த விகாரையை மையப்படுத்தி சுகாதார வழிகாட்டல்களுக்கு ஏற்ப வரையறுத்த எண்ணிக்கையானோரின் பங்கேற்புடன் நடாத்தப்பட்டது.

அந்த விகாரையின் விகாராதிபதி சங்கைக்குரிய வடினாபஹ சோமானந்த தேரர் அவர்களின் ஆலோசனைப்படி இந்த புண்ணிய நிகழ்வின் ஏற்பாட்டு அலுவல்கள் சம்பந்தமான ஆரம்பக் கலந்துரையாடலொன்று பிரதம அமைச்சரின் செயலாளரின் தலைமையில் மற்றும் ஏற்புடைய நிறுவனங்களின் பிரதிநிதிகளின் பங்கேற்புடன் அலரி மாளிகையில் நடாத்தப்பட்டது.

அதற்கேற்ப, கடின காவியுடையை அலரி மாளிகையில் வைப்புச் செய்தல், கடின வஸ்திரங்களைத் தாங்கிய பெரஹராவை புஞ்சி பொரளை சந்தியிலிருந்து ஸ்ரீ வஜிராஷ்ரம பௌத்த மத்திய நிலையம் வரை நடாத்துதல் மற்றும் விகாரையில் கடின வஸ்திரங்களை சங்கத்தினருக்குப் பூஜை செய்வது உட்பட அந்த புண்ணிய நிகழ்வின் சகல ஒருங்கிணைப்பு அலுவல்களும் மேற்கொள்ளப்பட்டன.

- ‘‘காந்தார உரிமை’’ (புயனொயசய ஊளைடைணையவழைெ) ஆவணத் திரைப்படத்தின் முதலாவது காட்சிப்படுத்தல் 2021 நவம்பர் 16 ஆந் திகதி கௌரவ பிரதம அமைச்சரின் தலைமையில், கௌரவ மகா சங்கத்தினர் மற்றும் ஏனைய சமயத் தலைவர்களின் பங்கேற்புடன் இலங்கை பாகிஸ்தான் உயர் ஸ்தானிகர் அலுவலகத்தின் பிரதிநிதிகள் உட்பட 200 அதிதிகளின் பங்கேற்புடன் அலரி மாளிகையில் நடாத்தப்பட்டது.

  நீண்ட காலமாக விசேடமான நாகரீகம் மற்றும் கலாசாரத்தைக் கொண்ட, தெற்காசியப் பிராந்திய நாடு என்ற வகையில் பாகிஸ்தானின் ”காந்தாரயவை” மையப்படுத்தி உருவாக்கப்பட்ட இந்த ஆவணத் திரைப்படத்தின் தயாரிப்புக்காக புத்தசாசன, சமய மற்றும் கலாசார அலுவல்கள் அமைச்சுக்குத் தேவையான ஒருங்கிணைப்பு வழங்கப்பட்டது.

- மறுசீரமைக்கப்பட்ட சிறிமதீபாய கட்டிடத்தில் கடமை அலுவல்களைப் புதிதாக ஆரம்பிக்கும் வகையில் 2021 நவம்பர் 20 ஆந் திகதி இரவு பிரித் ஓதும் புண்ணிய நிகழ்வொன்று நடாத்தப்பட்டது. அத்துடன், கௌரவ பிரதம அமைச்சரின் பிறந்த தினத்தை முன்னிட்டு 2021 நவம்பர் 21 ஆந் திகதி நூறு மகா சங்கத்தினரின் பங்கேற்புடன் சமய நிகழ்வொன்று அலரி மாளிகையில் நடாத்தப்பட்டது.

  இந்த அலுவல்களை ஒருங்கிணைத்தல் மற்றும் ஏற்புடைய ஒருங்கிணைப்புப் பணிகள் மேற்கொள்ளப்பட்டன.

- கௌரவ பிரதம அமைச்சரின் பிறந்த தினத்தை முன்னிட்டு புத்தசாசன, சமய மற்றும் கலாசார அலுவல்கள் அமைச்சினால் ஏற்பாடு செய்யப்பட்ட தானம் வழங்கும் புண்ணிய நிகழ்வு ஹொரணை, தெகந்துவல பிக்குனி பயிற்சி நிலையத்தில் 100 சங்கைக்குரிய பிக்குனிமாருக்கு தானம் வழங்குவதற்கு நடாத்தப்பட்ட புண்ணிய நிகழ்வுக்குத் தேவையான ஒருங்கிணைப்பு உதவி வழங்கப்பட்டது.

- இந்த ஆண்டின் நத்தார் வைபவம் 2021 டிசம்பர் 21 ஆந் திகதி கேகாலை சாந்த மேரி தேவாலயத்தை மையப்படுத்தி சுகாதார வழிகாட்டல்களுக்கு ஏற்ப நடாத்தப்பட்டது. கிறிஸ்தவ சமய அலுவல்கள் திணைக்களத்தினால் ஏற்பாடு செய்யப்பட்ட இந்த வைபவத்திற்குத் தேவையான ஒருங்கிணைப்பு உதவி வழங்கப்பட்டது.

2.5 நிர்வாகப் பிரிவு

2.5.1 நிர்வாக உப பிரிவு ஐ

❖ **பணியாட்தொகுதியை மீள்கட்டமைப்புச் செய்தல்**

புதிய அரசாங்கத்தின் "சுபீட்சத்தின் நோக்கு" கொள்கைப் பிரகடனத்திற்கு ஏற்ப எமது நாட்டை அபிவிருத்தியை நோக்கி இட்டுச்செல்லும் வேலைத்திட்டத்தைச் செயற்படுத்தும்போது மக்களை மையப்படுத்திய பொருளாதாரமொன்றை நிறுவுவதற்காக பொருளாதார மற்றும் சமூக கொள்கைகளை வகுத்தல், அதற்கு ஏற்புடைய கருத்திட்டங்கள் மற்றும் நிகழ்ச்சித்திட்டங்களை செயற்படுத்துவதற்கான பொறுப்பு பிரதம அமைச்சர் அலுவலகத்திற்கும் ஒப்படைக்கப்பட்டுள்ளமையினால், பிரதம அமைச்சர் அலுவலகத்தின் நிறுவனக் கட்டமைப்பை தற்போதைய கடமைப்பொறுப்புக்குப் பொருந்தும் வகையில் மீள்கட்டமைப்புச் செய்ய வேண்டிய தேவை உருவானது. அதற்கேற்ப தயாரிக்கப்பட்ட புதிய நிறுவனக் கட்டமைப்பின்படி பிரதம அமைச்சர் அலுவலகத்தின் பணியாட்தொகுதிக்கு மற்றும் பிரதம அமைச்சரின் பிரத்தியேகப் பணியாட்தொகுதிக்குப் புதிய பதவிகளை உருவாக்குவதற்காக முகாமைத்துவ சேவைகள் திணைக்களத்தின் அனுமதி கோரப்பட்டதுடன், அதற்கு அனுமதி கிடைத்துள்ளது.

அதற்கேற்ப, அங்கீகரிக்கப்பட்ட பணியாட்தொகுதிக்குப் பொருத்தமான உத்தியோகத்தர்களை நியமித்தல், இடமாற்றம் செய்யும் அலுவல்கள் தற்போது நிறைவுபெற்று வருகின்றன.

❖ **பிரதம அமைச்சர் அலுவலகத்தினுள் உற்பத்தித்திறன் எண்ணக்கருவைச் செயற்படுத்தல்**

பிரதம அமைச்சர் அலுவலகத்திற்குச் சொந்தமான வளங்களை வினைத்திறன் மற்றும் விளைதிறன்மிக்கதாகப் பயன்படுத்தல், உள்ளக மற்றும் வெளியக சேவைபெறுநர்களுக்கு வினைத்திறன்மிக்க சேவையினை வழங்குதல் ஆகிய நோக்கங்களை முன்னிறுத்தி அலுவலகத்தின் உற்பத்தித்திறனை மேம்படுத்தும் நிகழ்ச்சித்திட்டம் செயற்படுத்தப்படுகிறது.

அதற்கேற்ப அலுவலக உத்தியோகத்தர்களுக்கு உற்பத்தித்திறன் எண்ணக்கருக்கள் தொடர்பான அடிப்படை சான்றிதழ் பாடநெறியொன்றை 03 குழுக்களாக நடாத்துவதற்கு ஏற்பாடு செய்யப்பட்டது. அதில் முதலாவது குழு பாடநெறியை சிறப்பாக கற்று நிறைவுசெய்ததுடன், அடுத்த 02 குழுக்களுக்கு 2022 ஆம் ஆண்டில் பாடநெறிகளை ஆரம்பிப்பதற்கு நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

அத்துடன், அடிப்படை சான்றிதழ் பாடநெறியில் அதிக புள்ளிகளைப் பெற்றுக்கொண்ட 07 உத்தியோகத்தர்களை உற்பத்தித்திறன் எண்ணக்கரு தொடர்பான டிப்ளோமா பாடநெறிக்கு அனுப்பிவைப்பதற்கான நடவடிக்கைகளும் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

அதற்கேற்ப, உற்பத்தித்திறன் எண்ணக்கருக்கள் தொடர்பாக கோட்பாட்டுரீதியான மற்றும் நடைமுறைரீதியான அறிவை வழங்குவதன் மூலம் கூட்டு அணுகுமுறையொன்று ஊடாக படைப்பாற்றலுக்கு முன்னுரிமை வழங்குவதன் மூலம் எதிர்வரும் 2022 ஆம் ஆண்டில் உற்பத்தித்திறன் விருதுப் போட்டியில் பங்குபற்ற எதிர்பார்க்கப்படுகிறது.

❖ சிறிமதீபாய பழைய கட்டிடத்தை நவீனமயப்படுத்தல்

105 வருடங்களுக்கு மேற்பட்ட வரலாற்றைக் கொண்ட பிரதம அமைச்சர் அலுவலகம் அமைந்துள்ள "சிறிமதீபாய" 1916 ஆம் ஆண்டில் நிர்மாணிக்கப்பட்ட புராதன கட்டிடமாகும். 2020 ஆம் ஆண்டு "சிறிமதீபாய" பழைய கட்டிடத்தை நவீனமயப்படுத்தும் பணிகள் கடற் படையினரால் ஆரம்பிக்கப்பட்டதுடன், அதன் புராதன மற்றும் தொல் பொருளியல் பெறுமதி பாதுகாக்கப்படும் வகையில் அந்த அலுவல்கள் நிறைவு செய்யப்பட்டுள்ளதுடன், 2022 ஜனவரி மாதத்தில் அந்தக் கட்டிடத்தில் பிரதம அமைச்சர் அலுவலகத்தின் உத்தியோகபூர்வ அலுவல்களை ஆரம்பிப்பதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

❖ சிறிமதீபாய நூலைத் (ஊழகசநந வுயடிடந டீழழம) தொகுத்தல்

பிரதம அமைச்சர் அலுவலகத்தின் செயற்பாடுகள் நடாத்திச் செல்லப்படுகின்ற கொழும்பு 07, ஏர்னஸ்ட் த சில்வா மாவத்தையில் அமைந்துள்ள சிறிமதீபாய

கட்டிடத்தின் தொல்பொருளியல், கட்டிடக்கலை மற்றும் வரலாற்றுப் பெறுமானங்களை உள்ளடக்கி "சிறிமதீபாய" எனும் பெயரில் நூலொன்றைத் (ஊழகசநந வுயடிடந டீழழம) தொகுப்பதற்கு நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது.

1916 ஆம் ஆண்டில் நிர்மாணிக்கப்பட்ட இந்த வளாகத்தின் வரலாற்றுச் சிறப்பு மற்றும் தொல்பொருளியல் பெறுமானங்கள் உள்ளடங்கிய கட்டுரைகள் மற்றும் புகைப்படங்கள், 1978 ஆம் ஆண்டு முதல் இன்று வரை சிறிமதீபாயவை பிரதம அமைச்சர் அலுவலகமாகப் பயன்படுத்திய கௌரவ பிரதம அமைச்சர்களின் மற்றும் செயலாளர்களின் புகைப்படங்களையும் உள்ளடக்கிய இந்த நூலைத் தொகுக்கும் அலுவல்கள் நிறைவடைந்துள்ளதுடன், 2022 ஜனவரி மாதம் இந்த நூல் வெளியிடப்படவுள்ளது.

இந்த நூல் வெளியிடப்படும் சந்தர்ப்பத்தில் நூலுடன் குறுவட்டொன்றை வழங்குவதற்கும், சிறிய சஞ்சிகை நிகழ்ச்சியொன்றை பிரதம அமைச்சர் அலுவலகத்தின் இணையத்தளத்தில் உள்ளடக்குவதற்கும் நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

❖ **அலரி மாளிகை, சிறிமதீபாய, நுவரெலியாவிலுள்ள பிரதம அமைச்சரின் உத்தியோகபூர்வ இல்லம் உள்ளடங்கிய நினைவு முத்திரைகளை வெளியிடுதல்**

இலங்கையின் புராதன கட்டிடங்கள் எனும் கருப்பொருளின் கீழ் பிரதம அமைச்சர் அலுவலகத்திற்குச் சொந்தமான அலரி மாளிகை, சிறிமதீபாய மற்றும் நுவரெலியாவிலுள்ள பிரதம அமைச்சரின் உத்தியோகபூர்வ இல்லம் ஆகிய வளாகங்களின் நினைவு முத்திரைகள் மூன்றினை உருவாக்கும் அலுவல்கள் அஞ்சல் திணைக்களத்தினால் நிறைவு செய்யப்பட்டுள்ளதுடன், இந்த நினைவு முத்திரைகளை 2022 ஜனவரி மாதத்தில் வெளியிடுவதற்கு நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது.

❖ **உற்பத்தித் திறனை மேம்படுத்துவதற்காக தகவல் மற்றும் தொடர்பாடல் தொழிநுட்பத்தைப் பயன்படுத்தல் (டிஜிட்டல்மயப்படுத்தல்)**

"சுபீட்சத்தின் நோக்கு" தேசிய கொள்கைச் சட்டகத்தின் அடிப்படைக் குறிக்கோளான தொழிநுட்பத்தின் அடிப்படையிலான சமூகமொன்றை

உருவாக்குதல் மற்றும் டிஜிட்டல்மயப்படுத்தப்பட்ட இலங்கையொன்றை உருவாக்குவதற்காக பிரதம அமைச்சர் அலுவலகமானது அரச பொறிமுறையை எளிதாக்கும் கருவியாக தகவல் மற்றும் தொடர்பாடல் தொழிநுட்பத்தைப் பயன்படுத்தி டிஜிட்டல் அரச சேவையொன்றை உருவாக்குவதற்குத் திட்டமிட்டுள்ளது.

மக்களை மையப்படுத்திய வினைத்திறன்மிக்க சேவையொன்றை வழங்குவதனை உறுதிப்படுத்தும் வகையில் பிரதம அமைச்சர் அலுவலகத்தின் உத்தியோகபூர்வ இணையத்தளம் நிதமும் இற்றைப்படுத்தப்படுகிறது. பயனர்களின் இலகுக்காக அந்த இணையத்தளம் 2021 ஆம் ஆண்டில் மீள்கட்டமைக்கப்பட்டது.

கொவிட் - 19 வைரஸின் பரவலைக் கட்டுப்படுத்துவதற்காக விதிக்கப்பட்ட பயணத் தடைகளின் மத்தியில் பிரதம அமைச்சர் அலுவலகத்தின் செயற்பாடுகளைத் தடையின்றி பேணிச் செல்வதற்காக உள்ளகரீதியில் தயாரிக்கப்பட்ட மென்பொருள் அமைப்புக்களை மேலும் மேம்படுத்துவதன் மூலம் தகவல் மற்றும் தொடர்பாடல் தொழிநுட்பப் பாவனை மேம்படுத்தப்பட்டுள்ளது. அதற்கேற்ப, உத்தியோகத்தர்கள் வீட்டிலிருந்து வேலை செய்வதற்கான வசதிகளை வழங்குவதற்காக ஆவண முகாமைத்துவ அமைப்புக்காக (னுஆளு) கைப்பேசி செயலியொன்று உருவாக்கப்பட்டது. பொதுசனத் தொடர்புகள் பிரிவின் தேவைகளுக்கு ஏற்றவாறு ஆவண முகாமைத்துவ அமைப்பு (னுஆளு) மேலும் அபிவிருத்தி செய்யப்பட்டதுடன், அந்தப் பிரிவின் அஞ்சல்களை முகாமைத்துவம் செய்வதற்காகவும், அழைப்பு நிலையம் ஊடாக கிடைக்கின்ற முறைப்பாடுகளை முகாமைத்துவம் செய்வதற்காகவும் அது சிறப்பாக செயற்படுத்தப்பட்டது. மேற்குறித்த ஆவண முகாமைத்துவ அமைப்பினை (னுஆளு) பிரதம அமைச்சர் அலுவலகத்தின் ஏனைய பிரிவுகளுக்கும் அறிமுகப்படுத்துவதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

மேலும், பிரதம அமைச்சர் அலுவலகத்தின் போக்குவரத்துப் பிரிவுக்காகத் தயாரிக்கப்பட்ட தரவு அமைப்பு, தெரியப்படுத்தும் குறுஞ்செய்தி வசதியொன்றுடன் இணைக்கப்பட்டதுடன், மொபிடெல் தனியார் கம்பனியிடமிருந்து ளுஆளு வலைவாசல் வசதியை அனுசரணையாக இலவசமாக பெற்றுக்கொள்ள நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது. இந்த வசதியைக் கொள்வனவு செய்த பின்பு ஏனைய அமைப்புக்களையும் குறுஞ்செய்தி வசதியுடன் இணைப்பதற்கு எதிர்பார்க்கப்படுகிறது.

கூட்டங்களை முகாமைத்துவம் செய்தல் மற்றும் அபிவிருத்தி அலுவல்களின் கண்காணிப்புக்காக பிரதம அமைச்சர் அலுவலகத்தின் தகவல் மற்றும் தொடர்பாடல் தொழிநுட்ப உப பிரிவினால் புதிய தரவு அமைப்பொன்று அபிவிருத்தி செய்யப்பட்டு வருகிறது. தரவு அமைப்பினை 2022 ஆண்டின் முதல் காலாண்டில் பரீட்சார்த்த மட்டமாக செயற்படுத்த எதிர்பார்க்கப்படுகிறது.

நவீன சைபர் அச்சுறுத்தல்களுக்கு முகங்கொடுக்க முடியுமான வகையில் பிரதம அமைச்சர் அலுவலகத்தின் உத்தியோகபூர்வ இணையத்தளம், மின்னஞ்சல் சேவை வழங்குனர் கணனி, உள்ளக சேவை வழங்குனர் கணனி ஆகியவற்றின் சைபர் பாதுகாப்பினை மேம்படுத்துவதற்கு நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது.

2.5.2 நிர்வாக உப பிரிவு ஐஐ

❖ போக்குவரத்து வசதிகள் சம்பந்தமான அலுவல்கள்

பிரதம அமைச்சர் அலுவலகத்தின் நிறுவனக் கட்டமைப்புக்கு ஏற்ப, பணியாட்தொகுதிக்கு குறைந்த செலவில் தேவையான போக்குவரத்து வசதிகளைப் பூர்த்தி செய்வதற்காக இலங்கை சுங்கத்தினால் அரசுடைமையாக்கப்பட்ட வாகனங்களை இந்த அலுவலகத்திற்கு வழங்குமாறு கோரிக்கை விடுக்கப்பட்டது. அதற்கேற்ப இலங்கை சுங்கத்தினால் அரசுடைமையாக்கப்பட்ட சில வாகனங்கள் பிரதம அமைச்சர் அலுவலகத்திற்குப் பெற்றுக்கொள்ளப்பட்டதுடன், அரசுடைமையாக்கப்பட்ட மேலும் சில வாகனங்களை எதிர்காலத்தில் பெற்றுக்கொள்வதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படுகின்றன. மேலும் பாவனையிலிருந்து அகற்றப்பட்டிருந்த வாகனங்களை மீண்டும் திருத்திப் பயன்படுத்துவதற்குத் தேவையான நடவடிக்கைகளும் மேற்கொள்ளப்பட்டன.

பிரதம அமைச்சர் அலுவலகத்தின் போக்குவரத்து வசதிகள் வழங்கலை வினைத்திறன்மிக்கதாக மாற்றுவதற்காக மென்பொருள் அமைப்பொன்று அறிமுகப்படுத்தப்பட்டுள்ளது. அதற்கேற்ப, சகல வாகனங்களினதும் சேவை அலுவல்கள், திருத்த அலுவல்கள், எரிபொருள் பெற்றுக்கொள்வது சம்பந்தமான தகவல்கள், சாரதிகளின் தகவல்கள் ஆகியவற்றை இற்றைப்படுத்த முடிந்துள்ளது. மேலும் கடமைப் பயணங்களுக்காக வழங்கப்படும் வாகனங்கள் சம்பந்தமான தகவல்களை ளுஆளு வசதியின் கீழ் கோரிக்கை விடுக்கும் அதிகாரிக்கும்,

சாரதிக்கும் அனுப்புவதற்கு முடியுமான வகையில் மென்பொருளை அபிவிருத்தி செய்வதற்கு நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளதுடன், அதன் ஊடாக போக்குவரத்துப் பிரிவின் அலுவல்களை வினைத்திறன்மிக்கதாக மாற்றியமைக்க முடிந்துள்ளது.

2.6 ஊடக மற்றும் தொடர்பாடல் பிரிவு


2.6.1 ஊடக மற்றும் தொடர்பாடல் பிரிவின் கடமைப்பொறுப்பு

கௌரவ பிரதம அமைச்சர், பிரதம அமைச்சர் அலுவலகம் மற்றும் பிரதம அமைச்சரின் கீழுள்ள அமைச்சுக்களினால் மேற்கொள்ளப்படுகின்ற அபிவிருத்தி மற்றும் சமூகப் பணிகள் தொடர்பாக அறியப்படுத்துவதற்காக ஒழுங்கான, முறையான, வலுவான ஊடகப் பாவனையொன்று அவசியமாகும். அத்துடன், கௌரவ பிரதம அமைச்சர், பிரதம அமைச்சர் அலுவலகம் மற்றும் பிரதம அமைச்சரின் கீழுள்ள அமைச்சுக்களினால் மேற்கொள்ளப்பட்ட கடந்தகால, தற்கால செயற்பணிகளை எதிர்காலத்திற்காகப் பாதுகாத்து வைப்பதும் சமூகத் தேவையாக உள்ளதுடன், அது செய்ய வேண்டிய பணியாகவும் இனங்காணப்பட்டுள்ளது. அதற்கேற்ப அந்தப் பணிகள் ஊடக மற்றும் தொடர்பாடல் பிரிவினால் ஒழுங்காக, முறையாக நிறைவேற்றப்படுகின்றன.

- **பிரதான நோக்கங்கள்**

1. கௌரவ பிரதம அமைச்சரின் அறிவுறுத்தலின்படி பிரதம அமைச்சர் அலுவலகத்தினால் செயற்படுத்தப்படுகின்ற பொருளாதார மற்றும் சமூக அபிவிருத்திச் செயற்பாடுகள் தொடர்பாக ஊடகங்கள் மூலம் மக்களுக்குத் தெரியப்படுத்தல்.
2. கௌரவ பிரதம அமைச்சரின் அரசியல் மற்றும் சமூகச் செயற்பாடுகளுக்கு ஏற்புடைய காட்சிகள் ∴ புகைப்படங்கள் ∴ அறிக்கைகளைப் பாதுகாத்தல் .
3. அரசின் கொள்கைப் பிரகடனத்தில் குறிப்பிடப்பட்டுள்ள ஊடகக் கொள்கையினைச் செயற்படுத்தும்போது பங்களிப்பு மற்றும் ஒருங்கிணைப்பினை வழங்குதல்.

- ஊடகப் பிரிவின் பிரச்சாரச் செயற்பாடு



இதில் வைபவங்கள், நிகழ்வுகள், ஊடகக் கலந்துரையாடல்களுக்கு ஊடக ஒருங்கிணைப்பினையும் அதற்கு ஏற்புடைய செய்தி அறிக்கைகளையும் வெளியிடுவது பிரதான பணியாக உள்ளதுடன், கௌரவ பிரதம அமைச்சரின் செய்திகளை ஊடகங்களுக்கு வெளியிடுவதும் மேற்கொள்ளப்படுகிறது. இந்த செயற்பாட்டில் ஊடக சந்திப்புக்களை ஏற்பாடு செய்தல், செய்தி அறையை (நேறுளு சுழுழுஆ) நடாத்திச் செல்லுதல், அரசியல் கட்டுரைகளுக்குத் தகவல்களை வழங்குதல் போன்ற பணிகள் மேற்கொள்ளப்படுவதுடன், பிரதம அமைச்சரின் தொடர்பாடல் மற்றும் ஊடகப் பிரிவுக்கு செய்தி இணையத்தளமொன்று நடாத்திச் செல்லப்படுகிறது.

ஊடக மற்றும் தொடர்பாடல் பிரிவு பின்வரும் அலகுகளின் கீழ் செயற்படுத்தப்படுகிறது.

- ஊடக அலகு
- தொடர்பாடல் அலகு
- புகைப்பட அலகு
- வீடியோ அலகு
- புதிய ஊடக அலகு
- வெளிநாட்டு ஊடக அலகு

2.7 உள்ளக கணக்காய்வுப் பிரிவு

2.7.1.உள்ளக கணக்காய்வுப் பிரிவின் கடமைப்பொறுப்பு

பிரதம அமைச்சரின் செயலாளரினால் சமர்ப்பிக்குமாறு கட்டளையிடப்படுகின்ற கணக்காய்வு அறிக்கைகளை வழங்குதல், பிரதான உள்ளக கணக்காய்வாளரின் காலாண்டுரீதியான மதிப்பீட்டு அறிக்கைகளை தேசிய கணக்காய்வு அலுவலகம் மற்றும் முகாமைத்துவக் கணக்காய்வுத் திணைக்களத்திற்கு அனுப்பி வைத்தல் மற்றும் அந்த நிறுவனத்தின் வழிகாட்டலுக்கு ஏற்ப கணக்காய்வு மற்றும் முகாமைத்துவக் குழுக் கூட்டங்களை நடாத்துதல் என்பன உள்ளக கணக்காய்வுப் பிரிவின் பிரதான கடமைப்பொறுப்பு ஆகும்.

2021 ஜனவரி 01 ஆந் திகதி முதல் 2021 டிசம்பர் 31 ஆந் திகதி வரை இந்தப் பிரிவினால் நிறைவேற்றப்பட்ட செயற்பாடுகளைப் பின்வருமாறு குறிப்பிடலாம்.

சூ	செயற்பாடுகள்	முன்னேற்றம்
